மாலை : 50 மணி : 12 டிசம்பர் 2008 விலை ரூ.10

# திருக்கோயில்

இந்து சமய அறநிலையத்துறை வெளியீடு





அருள்மிகு கலங்காமற் காத்த விநாயகர் துணை

# அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயில்

**(குருபரிகாரஸ்தலம்)**

**ஆலங்குடி - 612 801.**

**வலங்கைமான் வட்டம்.** **திருவாரூர் மாவட்டம்**

## குருபெயர்ச்சி இலட்சார்ச்சனை விழா

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2039 கார்த்திகை மாதம் 21-ம் தேதி (06-12-2008) சனிக்கிழமை காலை 10-48க்கு அருள்மிகு குருபகவான் தனுசு ராசியிலிருந்து மகர ராசிக்கு பிரவேசிக்கிறார். அதனை முன்னிட்டு கீழ்கண்ட இராசி நேயர்கள் தங்களுடைய ஜென்ம ராசிக்கு பரிகாரம் செய்து கொள்வது மிகவும் உத்தமம்.

**இராசிகள் - மேஷம், மிதுனம், சிம்மம், துலாம் , விருச்சிகம், மகரம், கும்பம்**

அதனை முன்னிட்டு

# அருள்மிகு குருபகவானுக்கு

எதிர்வரும் கார்த்திகை மாதம் 12-ம் தேதி (27-11-2008) வியாழக்கிழமை முதல் கார்த்திகை மாதம் 19-ம் நாள் (4-12-2008) வியாழக்கிழமை முடியவும் மீண்டும் கார்த்திகை மாதம் 26-ம் நாள் (11-12-2008) வியாழக்கிழமை முதல் மார்கழி மாதம் 7-ம் நாள் ((22-12-2008) திங்கட்கிழமை முடியவும்

**இலட்சார்ச்சனை நடைபெறும்.**

நேரடியாக இலட்சார்ச்சனையில் பங்கு பெற கட்டணம் ரூ.125/-

அஞ்சல் மூலம் பிரசாதம் பெற இலட்சார்ச்சனை கட்டணம் ரூ.150/-

(ரூபாய் நூற்றி ஐம்பது மட்டும்)

அருள்மிகு குருபகவான் உருவம் பொறித்த 2 கிராம் வெள்ளி டாலர் பிரசாதமாக வழங்கப்படும். தொகையை மணியார்டர் மூலமாகவோ, டிமாண்ட் டிராப்டாகவோ, செயல் அலுவலர், அருள்மிகு ஆபத்சகாயேஸ்வர சுவாமி திருக்கோயில் ஆலங்குடி - 621 801. வலங்கைமான் வட்டம், திருவாரூர் மாவட்டம் என்ற முகவரிக்கு தங்களுடைய பெயர், நட்சத்திரம், இராசி, கோத்திரம், லக்னம் ஆகிய முழு விபரங்களையும் எழுதி அனுப்பி பிரசாதம் பெற்றுக் கொள்ளலாம். காசோலைகள் ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது. (பாரத ஸ்டேட் வங்கி) டிமாண்ட் டிராப்ட் எடுப்போர் கும்பகோணம் வங்கி கிளையில் மாற்றத்தக்க வகையில் அல்லது சிட்டி யூனியன் வங்கி (திருவாரூர் மாவட்டம்) ஆலங்குடி - 612 801. என்ற முகவரிக்கு எடுத்து அனுப்பவும். மேலும் விபரங்களுக்கு www.tiruvarur.tn.nic.in மற்றும் www.alangudigurubhagavan.org என்ற இணையதளத்தில் பார்த்து தெரிந்து கொள்ளவும்.

**இலட்சார்ச்சனை நேரம்**

***காலை 9.00 மணி முதல் 12.00 மணி வரை, மாலை 4.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை***

குறிப்பு - இத்திருக்கோயிலில் கடந்த 13-09-2007 அன்று பாலாலயம் செய்யப்பட்டு திருப்பணி வேலைகள் தொடங்கப்பட்டு நடந்து வருகின்றன. வரும் திருவள்ளுவர் ஆண்டு 2040 பங்குனித் திங்கள் 26ம் நாள் (08-04-2009) புதன்கிழமை குடமுழுக்கு நடைபெற உள்ளது. திருப்பணி மற்றும் குடமுழுக்கு நிகழ்வில் பங்குபெற விரும்புவோர் பங்கு கொள்ள விரும்பும் திருப்பணிக்கோ அல்லது குடமுழுக்கு செலவுகளுக்கோ தங்களால் இயன்ற தொகையினை மேற்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இங்ஙனம்,

பொன். நந்தகோபால், எம்,ஏ.,
செயல் அலுவலர்

வீ.அன்பரசன்
அறங்காவலர் குழு தலைவர்

டாக்டர் துரைவேலன், ஏ.எஸ்.ரவி பி.ஏ., சித்ரா ரவிச்சந்திரன், தியாகராஜன்
அறங்காவலர்கள்

குருவருள் பெற்று வளமுடன் வாழ்க!




# திருக்கோயில்

திருவள்ளுவர் ஆண்டு 2039 - மார்கழி மாதம்
மாலை : 50 மணி : 12 டிசம்பர் 2008


## அன்பார்ந்த வாசகப் பெருமக்களே!

**வணக்கம்.**

மாதங்களில் உயர்ந்ததான திருவுடை மார்கழியில் இறைவன் நம் இல்லங்களைத் தேடி வந்து எழுந்தருளுகின்றான்.

**"இங்கு நம் இல்லங்கள் தோரும் எழுந்தருளி**
**செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகன்"**

என்று திருவெம்பாவையில் மணிவாசகப் பெருமான் அவனுடைய எளிவந்த வான் கருணையைப் போற்றுகின்றார். அவனுடைய எழிலார்ந்த நடனக் கோலத்தை உள் முகப்பில் காண்கிறோம். ஆண்டாள் திருப்பாவையில் திருமாலை, வங்கக் கடல் கடைந்த மாதவனை, கேசவனை என்று அழைக்கிறாள். வங்கக் கடலோரம் அமைந்த திருமயிலாபுரியில் மாதவனாகவும், கேசவனாகவும் அவரைத் தனித்தனிக் கோயில்களில் காண்கிறோம். மயிலை வளர் மாதவனை முகப்போவியமாகக் கொண்டு இம்மாத இதழ் மணம் பரப்புகிறது.

ஆண்டாளுக்கும் ஐயனான ஆதனூர் அழகனை பாச்சுடர் வளவ. துரையன் கட்டுரையில் காண்கிறோம். முனைவர் ஏ. பரந்தாமனின் கட்டுரை அரங்கத்தம்மானின் அடியவர்கள் பெருமையைப் பேசுகிறது.

மார்கழி மாதம் பாவை நோன்பிற்கான காலமாகும். பாவை நோன்புடன் பலவகையான நோன்புகளைப் பற்றிய விபரங்களையும் புத்தூர் ச. முத்துச்சாமியின் **"விரதங்களும் பண்பாடும்"** என்ற கட்டுரை விளக்குகிறது.

ஆலய உலாவில் **"கொட்டையூர் கோடிலிங்கேசுவரர்"** ஆலயத்தின் சிறப்புகளைப் பனையபுரம் அதியமானும், **"மோகனூர் அருள்மிகு பிரசன்ன வெங்கடேசப் பெருமாள்"** சிறப்புகளை பரமத்திவேலூர் கே.எஸ். இளங்கோவன் அவர்களும் வண்ணப்படங்களுடன் வழங்கியுள்ளனர்.

சிறப்புக் கட்டுரையாக வாரியார் சுவாமிகளின் **"அந்தரங்க பக்தி"** என்னும் கருத்தோவியமும், மார்கழியில் வீடுபேறு பெற்ற அரன் அடியார்களின் வண்ண ஓவியங்களும், தமிழிசைக் காவலர் திருஞானசம்பந்தர் கட்டுரையும், வழக்கமான தொடரான **"உலகம் உய்ய உதித்த உடையவர்"** கட்டுரையும் வெளியாகியுள்ளன.

இம்மாதத்தின் சிறப்பு நிகழ்ச்சியான திருவாதிரைப் பெருவிழாவின் சிறப்பு குறித்து முனைவர் செந்தமிழ்வாரிதி இரா. செல்வக்கணபதி அவர்கள் வழங்கியுள்ள கட்டுரையும், வைகுண்ட ஏகாதசியின் பெருமைகளும் வெளிவந்துள்ளன.

ஆதிரைத் திருநாளும், வைகுண்ட ஏகாதசிப் பெருநாளும் பொலியும் மார்கழியில், எல்லோரும் எல்லாமும் பெற்று இனிமையுடன் வாழ இறையருளை இறைஞ்சி வேண்டுகிறேன். அண்ணாமலை எம் அண்ணல், சகல செல்வ யோகமிக்க பெரு வாழ்வினை எல்லோருக்கும் நல்கி இன்பமாய் வாழ வைக்க வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

அன்புள்ள

(த. பிச்சாண்டி, இ.ஆ.ப.)
முதன்மை செயலர் /ஆணையர்


இந்து சமய அறநிலையத்துறை,
119, உத்தமர் காந்தி சாலை,
சென்னை - 600 0 34.

# குறளோவியம்



அத்தியெனும் வணிகன் அகமும் முகமும் வாடிய நிலையில் வள்ளுவரைக் காண வந்தான். ''சிரிப்பு தழைத்திருக்கும் உன் முகத்தில் கவலையின் ஆதிக்கம் ஏற்படக் காரணம் யாது? '' குறளார் உருக்கமுடன் வினவினார்.

அத்தியின் விழிகள் மழைத்துளி உதிர்க்கும் முகில்களாயின. தழுதழுத்த குரலில் அவன் பேசினான்.

''பெருமகனாரே! நான் பாடுபட்டுத் தொழில் செய்து சிறுகச்சிறுகப் பொருள் சேர்த்து ஊர்மெச்சும் வணிகனானேன். தங்களுக்கும் அது நன்கு தெரியும். அரண்மனைகூடக் கட்டிக் கொண்டு வாழ்வான் அத்தியென்று உற்றார் உறவினர் பெருமையுடன் கூறினர். ஆனால் இன்று என் நிலை என்ன தெரியுமா? ஆலமரத்தடி நிழலில்கூடத் தங்குவதற்கு எனக்கு இடம் கிடைக்குமா? இப்படியொரு அவலம் வந்து சூழ்ந்துவிட்டது.''

வள்ளுவர் திகைத்தார்.

''உண்மையாகவா? உன் தொழில் கெடவும் வளமைப்பொழில் கருகவும் காரணம் என்ன? எப்படி நடந்தது இந்த மாற்றம்?''

அத்தியினால் உடனடியாக விளக்கமளிக்க முடியவில்லை. சிறிது நேரம் அமைதியாக இருந்தான்.

''கொஞ்சம் கொஞ்சமாகக் குவித்த பொருளை, பன்மடங்கு பெருக்கிட வேண்டுமென்று அயல் நாட்டுடன் வாணிபம் நடாத்தக் கப்பல் ஒன்று வாங்கினேன். அதில் கொற்கை முத்தும், மிளகும், மயில்தோகையும் ஏற்றியனுப்பினேன் யவனத்திற்கு!. கைப்பொருள் அத்தனையும் போட்டு அந்தக் கப்பல் நிறைய ஏற்றுமதி செய்த பொருள்., யவன நாட்டுக்குச் சென்றிருக்குமேயானால் அதற்கென எனக்குக் கிடைக்கும் வருமானம் அளவிட முடியாததாக இருந்திருக்கும் ஆனால்... ஆனால்...!''

அழத்தான் முடிந்தது அத்தியினால்! அதற்கு மேல் எதுவும் சொல்ல முடியவில்லை. வள்ளுவர் புரிந்துகொண்டார் அவனை ஆறுதலாகத் தழுவியவாறு கேட்டார். ''புயல் காற்றில் அந்தக் கப்பல் கடலில் கவிழ்ந்துவிட்டது அப்படித்தானே?'' என்று!

ஆம் என்பதை அத்தி, தன் தலையை அசைத்ததின் வாயிலாகக் காட்டிக் கொண்டான். வள்ளுவர், அத்தியை அமைதிப்படுத்தி உணவளித்து உறங்கச் செய்தார். மறுநாள் பகல் முழுவதும் அத்தியின் மனத்தைத் தேற்றுகிற வேலையிலேயே ஈடுபட்டார்.'' மீண்டும் தொழிலைத் தொடங்கி வாழ்வில் நிமிர்ந்திட வழியுண்டு! நடந்ததையெண்ணி வளைந்து கிடக்காமல் சோகம் துடைத்துப் பீடு நடைபோட வேண்டும் என்று அறிவுரை கூறினார். அத்தியும் ஓரளவு ஊக்கம் பெற்று எழுந்தான். வள்ளுவரும் அவனுடன் சிறிது தொலைவு நடந்தார்.

''பெருந்தகையே! ஒவ்வொரு பொன்னையும் என் வீட்டுப் பேழையில் அடுக்க ஒவ்வொரு நாளும் நான் உழைத்தேன். சேரும்போது ஒவ்வொன்றாக வந்த பொன், இப்போது போகும்பொழுது ஒரேயடியாக ஒரே நாளில் போய்விட்டது பார்த்தீர்களா?''

என்று அத்தி, ஆதங்கத்துடன் திருவள்ளுவரிடம் சொன்னான். வள்ளுவர் நின்றார்.


''அதோ பார் அத்தி! அது என்ன தெரிகிறதா? கூத்தரங்கம் அந்தக் கூத்தரங்கத்தில் கூத்துப் பார்த்துக் களிக்க மக்கள் வரும்போது அரங்கத்திற்குள்ளே ஒவ்வொருவராகத்தான் வருவார்கள்! இல்லையா''

''ஆமாம்! ஆமாம்!''

''ஆனால், கூத்து முடிந்து மக்கள் செல்லும்போது அப்படியே கூட்டமாகக் கலைந்து சென்று விடுவார்கள்! அல்லவா?''

''ஆமாம்! ஆமாம்!''

''அதைப் போலத்தான் செல்வம் வந்து சேர்வதும் போவதும்! கூத்தரங்கில் கூட்டம் சேர்வதைப் போலச் செல்வம் சிறிது சிறிதாகச் சேரும்! அந்தச் செல்வம் நம்மை விட்டு நீங்கிப் போவது, கூத்து முடிந்ததும் கூட்டம் கலைவதைப் போன்றதாகும்.''



மாண்புமிகு தமிழக முதல்வர்
டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள்

''அடடா! என்ன உவமை! என்ன உவமை! இப்படியொரு உவமையைக் கேட்ட எனக்கு, என் கப்பல் மூழ்கிய கவலைகூடத் தெரியவில்லை. இத்தகைய அற்புத உவமையொன்றைத் தாங்கள் கூற வேண்டுமென்பதற்காகவே, நான் சேர்த்த பொருளனைத்தும் என்னை விட்டு நீங்கியது போலும்!''

இப்படி வியந்து பாராட்டிக்கொண்டே அத்தி வள்ளுவரின் கைமலர்களை எடுத்துத் தன் கண்களில் ஒத்திக் கொண்டான்.

**''கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்**
**போக்கும் அதுவிளிந் தற்று.''**

அதிகாரம் - 34 நிலையாமை பாடல் - 332

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் குறளோவியம் நூலிலிருந்து நன்றியுடன் எடுத்து வெளியிடப்படுகிறது

## இதழின் உள்ளே ...


| | | |
|---|---|---|
| 1 | மார்கழித் திருவாதிரைத் திருநாள் - கலைமாமணி செந்தமிழ்வாரிதி முனைவர் இரா.செல்வக் கணபதி | 5 |
| 2 | திரு ஆதனூர் திவ்யதேசம் - பாச்சுடர் வளவ. துரையன் | 7 |
| 3 | விரதங்களும் பண்பாடும் - புத்தூர் ச.முத்துச்சாமி | 9 |
| 4 | ஆலங்குடி ஆபத்சகாயேஸ்வரர் | 15 |
| 5 | திருமாலடியார்களும் திருவரங்கனும் - முனைவர் ஏ.பரந்தாமன் | 18 |
| 6 | கொட்டையூர் கோடிலிங்கேஸ்வரர் - பனையபுரம் அதியமான் | 22 |
| 7 | உலகம் உய்ய உதித்த உடையவர் - பெ.ராமநாத பிள்ளை | 26 |
| 8 | அந்தரங்க பக்தி - திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் - நினைவலைகள் | 30 |
| 9 | தமிழிசைக் காவலர் - திருஞானசம்பந்தர் - தமிழாகரர் தெ.முருகசாமி | 34 |
| 10 | மோகனூர் அருள்மிகு பிரசன்னவெங்கடேசப் பெருமாள் - பரமத்திவேலூர் கே.எஸ். இளங்கோவன் | 37 |



# மார்கழித் திருவாதிரைத் திருநாள்



முனைவர். இரா. செல்வக் கணபதி

தமிழ்நாட்டுச் சிவாலயங்களில் நடைபெற்றுவரும் ஆண்டுப் பெருவிழாக்களில் காலப்பழமையும் சாலப் பெருமையும் கொண்டது மார்கழித் திருவாதிரைத் திருநாள். திருமயிலையில் 1360 ஆண்டுகளுக்கு முன் திருஞானசம்பந்தர் அருளிச்செய்த தேவாரப் பனுவலுள்

''கார்தரு சோலைக் கபாலீச் சரமமர்ந்தான்

ஆதிரைநாள் காணாதே போதியோ பூம்பாவாய்''

என மார்கழித் திருவாதிரைத்திருநாள் சிறப்பு உரைக்கப்பட்டுள்ளது.

சிவபெருமானுக்கு உகந்த விண்மீன் திருவாதிரை. முத்தொள்ளாயிரம் சிவனை ஆதிரையான் என்றே குறிக்கிறது. வடமொழியில் இவ்விண்மீன் 'ஆருத்ரா' எனக் கூறப்படும். திருவாதிரை நாளில் தில்லைக் கூத்தன், தம் ஆனந்தக் கூத்தைக் காண விரும்பிய முனிவர் இருவருக்கும் தில்லையம்பலத்தில் திருநடனக்காட்சிக் காட்டியருளினார். இந்நாளைத் திருவாதிரைத் தரிசனம் என்பர். வடமொழியில் இது ஆருத்ரா தரிசனம் எனப்படும்.

சிவாலயங்களில் திருவாதிரைக்கு முன்பத்து நாள் தொடங்கித் திருவாதிரை உற்சவம் நடைபெறும். நடராசர் சிறப்புற்றுத் திகழும் தலங்களில் எல்லாம் இத்திருநாள் சிறப்பாகக் கொண்டாடப்படும். தில்லையில் திருவாதிரைத் திருநாள் வெகுச் சிறப்படன் நடைபெறும். ஒன்பதாம் நாள் தேரோட்டமும், திருவாதிரை அன்று விடியல் மகா அபிடேகமும், காலை திரு நடனக்காட்சியும் இன்று வரை அங்கே பெருஞ்சிறப்புடன் நடைபெற்று வருகிறது.

திருவாரூரில் திருவாதிரை திருநாள் கண்டு திருநாவுக்கரசர் மகிழ்ந்ததையும், அத்திருவிழாக்காட்சியை நாவரசர் சொல்லக்கேட்டுத் திருஞானசம்பந்தர் மனம்



மகிழ்ந்ததையும் பெரியபுராணத்தில் சேக்கிழார் அழகுற எடுத்துரைக்கிறார்.

திருவாதிரை நைவேத்தியம் ''களியமுது'' எனப்படும். திருவாதிரை ஒரு வாய் களி, என்பது சைவப்பழமொழி. சேந்தனார் படைத்த களியமுதைத் தில்லையம்பலவன் விரும்பி உண்டு அவர் மனம் மகிழத் திருமேனியில் களியமுது எங்கும் நிறைந்திருக்கக் காட்சியளித்து அருளினார். திருவாதிரைத் திருநாளில் சிவாலயங்களில் திருவெம்பாவை ஓதி

வழிபடுவது மரபு. நாவுக்கரசர், திருவாரூர்த் தேவாரப் பனுவல் ஒன்றில்

''முத்து விதான மணிப் பொற்கவரி முறையாலே
பத்தர் களோடு பாவையர் சூழப் பலிப்பின்னே
வித்தகக் கோல வெண்டலை மாலை விரதிகள்
அத்தன் ஆரூர் ஆதிரைநாளில் அதுவண்ணம்''

என ஆதிரைத் திருநாள் பெருஞ்சிறப்பு உரைக்கிறார்.

மார்கழி நீராடல் சிறப்பு உரைப்பது திருவெம்பாவை. சைவ ஆதினங்கள் சிலவற்றுள், மார்கழி முப்பது நாளும் ஏனைய திருமுறைகளைத் திருக்காப்பிட்டு விட்டு, எல்லாச் சந்நிதிகளிலும் திருவெம்பாவையை மட்டுமே ஓதி வழிபடும் மரபு இருந்திருக்கிறது. சங்க நூல்களில் இது 'தை நீராடல்' எனக் குறிக்கப்பட்டுள்ளது.

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளில் ஆதிரை விண்மீன் கூடும் நாளில் நிகழும் இத்திருநாளில், அம்பலவன் தாள் பணிந்து சைவப் பெருமக்கள் அருள் பெற்று உய்யலாம்.



# திருவாதிரைக் களி

"**களி**" என்ற சொல் மகிழ்ச்சியைக் குறிக்கின்றது, திருவாதிரையன்று மக்கள் மகிழ்ச்சியுடன் ஆடிப்பாடி மகிழ்வர். அந்த ஆடல் பாடல்களே களி என்று அழைக்கப்பட்டன கேரளத்தில் இது இந்நாளிலும் "**திருவாதிரைக் களி**" என்றே குறிக்கப்படுகிறது.

இப்போது நாம் சொல்லப்போகும் "**களி**" என்பது திருவாதிரை நாளில் பெருமானுக்கு படைக்கப்படும் நிவேதனமாகும். அச்சிறப்பால் இது "திருவாதிரைக் களி" என்றே அழைக்கப்படுகிறது. அரிசியை வறுத்து இடித்து மாவாக்கி வெல்லப்பாகில் சேர்த்துக் கிளறி ஏலக்காய் முந்திரி இட்டு இதைத் தயாரிக்கின்றனர். இதற்கு உடன் வைத்து உண்ணத் தக்கதாக. அவரை, மொச்சை, கடலை, வாழைக்காய் முதலியவற்றைக் கொண்டு ஒரு கூட்டும் செய்யப்படும்.

திருவாதிரை நாளில் களியும் கூட்டும் நடராசப் பெருமானுக்கு நிவேதிக்கப் படுகின்றன.

பன்னிரண்டு திருமுறைகளில் ஒன்பதாம் திருமுறையில் இடம் பெற்றுள்ள திருவிசைப்பா திருப்பல்லாண்டின் ஆசிரியர் சேந்தனர். இவர் படைத்த களியை நடராசப் பெருமான் அமுது செய்ததுடன் அதைப் பலர் அறிய தன் திருமேனியிலும் காட்டினார் நடராசர் நடந்துவந்த தடத்திலும் களி சிந்திக் கிடந்ததைக் கண்டு அன்பர்கள் வியந்ததை அவர் புராணம் விரிவாகக் கூறுகிறது.

தில்லையில் இவர் அருளிய திருப்பல்லாண்டில் "**தேரார் வீதி சிற்றம் பலத்து அணியுடை**" என ஆதிரைநாளைச் சிறப்பித்துள்ளார்.

ஒரே பாசுரம் பெற்ற

# திவ்ய தேசம்

# திரு ஆதனூர்

- பாச்சுடர் வளவ. துரையன், எம்.ஏ.,



திருமங்கையாழ்வார் திருஅரங்கநாதனுக்குப் பெரிய திருமதில் கட்டும் பணியில் ஈடுபட்டிருந்தார். அந்த கைங்கர்யத்தில் அவரது பொருள் எல்லாம் செலவாகி விட்டது. அவர் பெருமானை நோக்கிப் பொருள் தருமாறு வேண்டினார். பெருமாள். ''கொள்ளிடக் கரைக்கு வா, பணம் தருகிறேன்'' என்று கூறினார். மங்கை மன்னன் அவ்விதமே வந்து நின்றார்.

பெருமான் அவர் முன்னே ஒருவணிகரைப் போல, தலைப்பாகை அணிந்து, கையில் எழுத்தாணி, மரக்கால் கொண்டு தோன்றினார். நீர் யாரென்று திருமங்கையாழ்வார் கேட்க அந்த வணிகர் ''பெருமானே உனக்காக என்னை அனுப்பினார். இந்த மரக்காலைக் கையில் எடுத்து எம்பெருமானே சரண் என்று மூன்றுமுறை சொன்னால் நாம் வேண்டிய பொருள் இதில் வந்து சேரும்'' என்று கூறினார்.

மன்னன் இங்குள்ளவர்களுக்கு இந்த மரக்காலால் அளந்து கூலி கொடுங்கள் என்று கூறினார். அதற்கு அந்த வணிகர் '' நான் இவர்களின் கூலிக்காக இந்த ஆற்றுமணலை அளந்து போடுவேன். உண்மையாக உழைத்தவர்க்கு அம்மணல் பொன்னாக மாறும். சோம்பலாக ஏமாற்றியவர்க்கு மணலாகவே இருக்கும்'' என்று கூறி தன் மரக்காலால் அளந்து போட்டார்.

பெரும்பாலோர்க்கு மணலாகவே தெரிய இவன் மந்திரவாதி என்று வணிகனை அடிக்கவர வணிகன் ஓட ஆரம்பித்தார். அனைவருடனும் மங்கை மன்னனும் குதிரையில் ஏறித்துரத்தினார்.

அவ்விதம் ஓடிவந்த பெருமாள் மரக்கால், ஓலை, எழுத்தாணியுடன் திருஆதனூரில் புகுந்து எழுந்தருளினார் என்பது ஒரு வரலாறு ஆகும். எனவேதான் இத்திவ்யதேசத்தில் பெருமாள், ஆண்டளக்கும் ஐயனாக தம்தலையின் கீழ் மரக்காலுடன், இடது திருக்கரத்தில் எழுத்தாணி, ஓலையுடன் கிழக்குநோக்கிப் பள்ளி கொண்டிருக்கிறார்.

பெருமாள் ஓடிவரும்போது ஓலையை எடுத்து கணக்கு எழுதிய ஊர் ஓலைப்பாடி என்றும், கம்பீரமாக நடந்து வந்த ஊர் விசயமங்கை என்றும் கூறுகின்றனர். மேலும் ஓடிவருகையில் திரும்பிப் பார்த்த ஊர் திரும்பூர் என்றும், திருமங்கையாழ்வார் வருகின்றாரா, இல்லையா என்று மயங்கி மாஞ்சுபோன ஊர் மாஞ்சேரி என்றும், மரக்காலுக்குள் கையை வைத்த ஊர்



வைகாவூர் என்றும், புகுந்தது பூங்குடி என்றும், அமர்ந்தது ஆதனூர் என்றும் இந்நாளிலும் வழங்கப்பட்டு வருகிறது.

திருவரங்கத்திற்கும் திருஆதனூருக்கும் ஒற்றுமைகள் உள்ளன. அரங்கத்தில் இருபுறமும் காவிரியும் கொள்ளிடமும் ஓடுவதுபோல இத்திவ்யதேசத்திற்கும் இருபுறங்களிலும் 2 கிலோமீட்டர் தூரத்தில் காவிரி, கொள்ளிடம் ஆகியவை ஓடுகின்றன.

இங்கும் ஒரு காலத்தில் திருவரங்கம் போன்றே ஏழுமதில்கள் இருந்ததாகக் கூறப்படுகிறது.

பரமபதத்தில் உள்ளது போன்ற இரண்டு தூண்கள் திருவரங்கம் கருவறையுள் அமைந்துள்ளன. அவற்றை மணத்தூண்கள் என்பர். அதே போன்ற இருதூண்கள் ஆதனூரிலும் உண்டு. 108 திவ்ய தேசங்களிலும் திருவரங்கத்திலும் திரு ஆதனூரிலும் உண்டு. இவற்றைத் தழுவுவோர்க்கு ஆயுள் வளர்வதால் விரைவில் எமனுலகு செல்வது நேராதாம்.

இலங்கையிலிருந்து அயோத்திக்குச் செல்கையில் ஆஞ்சநேயர் இங்கு வந்து தங்கி இருநாட்கள் இளைப்பாறியதாய்க் கூறுவர். இராமபிரானும் இங்கு வந்து அனுமன் வந்தாரா என்று கேட்டுத்தன் திருவடியை வைத்துச் சென்றதாகக் கூறுவர். இராமபிரான் திருவடியும் ஆஞ்சநேயரும் இப்போதும் இங்கே காட்சிதருகின்றனர்.

இங்குள்ள உற்சவர் அழகிய மணவாளன் (ஸ்ரீ ரெங்கநாதன்) என்றும் தாயார் பார்க்கவி, ரங்கநாயகி என்றும் திருநாமங்கள் தரித்து அருள்பாலிக்கின்றனர்.

பிரம்மனின் தலையானது சிவபெருமானின் கையில் ஒட்டிக் கொள்ள அதைச் சுட்டெரித்து சாம்பலாக்குமாறு சிவன் அக்னிதேவனிடம் கூறினார். அக்னிதேவன் முயன்று முடியாமல் போனதால். அக்னியையும் பிரம்மஹத்தி தோஷம் பிடித்துக் கொண்டது. அக்னி இத்தலம் வந்து பெருமாளிடம் வேண்டி நலம் பெற்றார்.

திருமங்கையாழ்வார் பெரிய திருமடலில்

*''அன்னவனை ஆதனூர் ஆண்டளக்கும் ஐயனை''-130*

என்று ஒரே வரியில் மங்களாசாசனம் செய்துள்ளார்.

இந்தத் திரு ஆதனூர் திவ்யதேசம் சுவாமி மலையிலிருந்து சுமார் 3 கி.மீ தொலைவிலும் கும்பகோணத்திலிருந்து 8 கி.மீ தொலைவிலும் உள்ளது.


திருக்கோயில்
திங்கள் இதழ்




| | |
|---|---|
| தனி இதழின் விலை | ரூ 10/ |
| ஓராண்டுச் சந்தா | ரூ 120/ |
| ஐந்து ஆண்டுச் சந்தா | ரூ. 500/ |
| பத்து ஆண்டுச்சந்தா | ரூ 1000/ |
| ஆயுட்காலச்சந்தா | ரூ 1500/ |

(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

''திருக்கோயில்'' இதழில் விளம்பரம் செய்து பயனடைவீர்!

**திருத்திய விளம்பரக் கட்டண விவரம்:**

| | |
|---|---|
| 1. பின்பக்க அட்டை வெளிப்புறம் (வண்ணத்தில்) | ரூ 15,000/ |
| 2. முன்பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்) | ரூ 10.000/ |
| 3. பின்பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்) | ரூ 7,500/ |
| 4. உள்புறம் முழுப்பக்கம் | ரூ 5,000/ |
| 5. உள்புறம் அரைப்பக்கம் | ரூ 3,000/ |

இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, 119, உத்தமர் காந்தி சாலை சென்னை 600 034 என்ற முகவரிக்கு அனுப்பவும்.

# விரதங்களும் பண்பாடும்

உலகத்து உயிர்களைப் படைத்து எல்லா நலன்களையும் வழங்குபவன் இறைவன். அவனை எப்போதும் வாழ்த்தி வணங்குதல் உயிர்களின் கடமை. இன்றைய உலகியல் சூழ்நிலையில் எப்பொழுதும் இதனைச் செய்ய முடியுமா என்றால் முடியாது என்ற பதில் தான் வரும். எனினும் குறிப்பிட்ட ஒரு சில நாள்களில் இறைவன் சிந்தனையாக இருக்கலாம் என்பதற்காகத்தான் விரதங்கள் பல கடைப்பிடிக்கப்படுகின்றன. விரதங்களின் வகைகள், பண்பாட்டு முறைகள், பயன்கள் ஆகியவற்றை விளக்குவதே இக்கட்டுரை.

ச.முத்துச்சாமி, புத்தூர்


விரதம் என்றால் ஐம்புலன்களை அடக்குதல் என்பது பொருள் அதாவது சித்தத்தை ஒருமுகப்படுத்துதல் ஆகும். மனமானது பொறிபுலன்களின் வழி அலையாமல் நிற்றல் பொருட்டு உணவை விடுத்தேனும், சுருக்கியேனும் இறைவனை வழிபட வேண்டும். அதற்கு நோன்புகளைக் கடைப்பிடித்தல் இன்றியமையா பண்பு ஆகும்.

"அஞ்சப்புலன் இவற்றால் ஆட்ட ஆட்டுண்டு
அருநோய்க்கு இடமாய உடலின் தன்மை
தஞ்சமெனக் கருதித் தாமேல் நெஞ்சே!
தாழக் கருதியேல் தன்னைச் சேரா
வஞ்சமனத்தவர்கள் காண நண்ணா
மணிகண்டன் வானவர் தம்பிரான் என்று ஏத்தும்
நெஞ்சர்க்கு இனியவன் நெய்த்தானம் என்று
நினையுமா நினைந்தக் கால் உய்யலாமே"

என்ற அப்பர் பெருமானின் வாக்கினை இங்கு நினைவு கூர்வது மிகவும் பொருத்தம்

### விரதங்கள்

வாரத்தின் ஏழு நாட்களிலும் பன்னிரண்டு மாதங்களிலும் விரதங்கள் கடைப்பிடிக்கலாம். அவற்றில் விநாயக சதுர்த்தி விரதம் நவராத்திரி, கேதார கௌரிவிரதம், கந்த சஷ்டி விரதம், திருக்கார்த்திகை விரதம், சிவராத்திரி விரதம், ஏகாதசி விரதம், பிரதோசவிரதம், பாவை நோன்பு, பங்குனி உத்திரம், காயத்ரி விரதம், காரடையான் நோன்பு, வரலட்சுமி விரதம் போன்றவை மிகவும் முக்கியமான விரதங்களாகும்.



### விநாயகர் சதுர்த்தி

''பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகணபதி வர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே''
- திருஞானசம்பந்தர்

ஆவணி மாதம் சுக்லபட்சசதுர்த்தி திதியில் ''விநாயகர் சதுர்த்தி'' கொண்டாடப்படுகிறது. ''கணபதி பூஜை கைமேல் பலன்'' என்பது முதுமொழி. சதுர்த்தி அன்று களிமண், மஞ்சள், சந்தனம்,

வெல்லம், சாணம் இவற்றில் ஏதாவது ஒன்றைக் கொண்டு விநாயகர் உருவம் செய்து வழிபடுவர். அன்றையதினம் ஔவையார் அருளிய விநாயகர் அகவலைப் பாடி வழிபாடு செய்யலாம். காசிப முனிவரால் அருளப்பெற்ற ''வளர்சிகையைப் பராபரமாய் வயங்கு விநாயகர் காக்க'' என்று தொடங்கும் விநாயகக் கவசம் பாடலாம்.

**''விநாயகனே வெவ்வினையை வேரறுக்கவல்லான்**
**விநாயகனே வேட்கை தணிவிப்பான் விநாயகனே**
**விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்**
**கண்ணிற் பணிமின் கனிந்து''**

நம் வினைகளை வேரறுக்கும் விநாயகப் பெருமானை விநாயகர் சதுர்த்தி விரதம் தொடங்கி வழிபடுவோம்.

**கந்தர் சஷ்டி விரதம்**


சைவ சமயத்தினர் கடைப்பிடிக்கும் முக்கிய விரதங்களில் கந்த சஷ்டிவிரதம் சிறப்பு வாய்ந்தது. அது முருகப் பெருமான் சூரனை வதம் செய்தநாளாகும். முருகனுக்குரிய விரதங்கள் மூன்று வகையாகும். அவை வாரவிரதம், நட்சத்திரவிரதம், திதிவிரதம் எனப்படும். வார விரதம் என்பது ஒவ்வொரு வாரத்திலும் சுக்கிரவாரம் என்று சொல்லப்படும் வெள்ளிக்கிழமையன்று விரதமிருந்து முருகனை வழிபடுவது. நட்சத்திர விரதம் என்பது ஒவ்வொரு மாதமும் கார்த்திகை நட்சத்திரத்தன்று விரதமிருந்து முருகனை வழிபடுவது. திதிவிரதம் என்பது ஐப்பசி மாதம் வளர்பிறையில் சஷ்டியன்று விரதமிருந்து முருகனை வழிபடுவது ஆகும்.

ஐப்பசி மாதம் வளர்பிறையில் வரும் பிரதமை, துதியை, திருதியை, சதுர்த்தி, பஞ்சமி, சஷ்டி என்னும் ஆறுதிதிகளும் திருவுடைத் திதிகள் எனப்படும். இந்த ஆறு நாட்களும் கந்த சஷ்டி விரதம் அனுட்டிக்கப்படுகிறது. இந்நாளில் திருமுருகாற்றுப்படை, கந்த சஷ்டிகவசம், கந்தரலங்காரம், கந்தரந்தாதி, கந்தர்கலிவெண்பா ஆகியவற்றை ஓதி முருகப் பெருமானின் திருவருளைப் பெறலாம்.

**நவராத்திரி**

நவம் என்னும் சொல்லுக்கு ஒன்பது என்று பொருள். எனவே நவராத்திரி என்பதற்கு ஒன்பது இரவுகள் என்று பொருள். சிவத்தின் அருளாற்றல்தான் சக்தி. இவ்வுண்மையைச் சாத்திரநூலான சிவ ஞானசித்தியார் **''அருளது சக்தியாகும் அரன்தனக்கு''** என்று கூறும். சிவனுக்கு ஒரு ராத்திரி என்றால் சக்திக்கு ஒன்பது ராத்திரிகள். **ஆத்தாளை அண்டமெல்லாம் பூத்தாளை புவியடங்கக்காத்தாளை** என்று ஆக்க சக்தியானவளைத் தாய் வடிவில் பக்தர்கள் வணங்கி வருகின்றனர். ஏனெனில் உயிருக்கு உருக் கொடுத்துப் படைத்து கருணையோடு காப்பாற்றுகிறவள் அன்னை. உணர்வு, உயிர்ப்பு, இரண்டாலும் பிணைத்துப் பாசம், பரிவு காட்டிஅன்பினை வெளிப்படுத்தும் நம்மைப் பெற்ற அன்னையை அம்மா என்ற ஒலியாக வெளிப்படுத்துகிறோம்.

குழந்தையைப் பெற்றவள்தான் தாய் என்பதில்லை தாய்க்குரிய பண்புகள் பொருந்திய எவருமே தாய்தான். தாய் போன்ற கருணை உள்ளவன் என்பதால்தான் இறைவனையே **''அம்மையே அப்பா''** **''அப்பன் நீஅம்மைநீ''** பால் நினைந்தூட்டும் தாய் **''தாயிற் சிறந்த தயாவான தத்துவனே''**



என்றனர். களங்கமற்ற தூய்மை, தன்னலமற்ற தன்மை, பூமியினும் பொறுமை, மன்னிக்கும் தன்மை, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, அன்பு. இத்தனை நற்பண்புகளும் எங்கு குடிகொண்டிருக்கிறதோ அங்கு ஒளிர்வதுதான் தாய்மை என்னும் சக்தி. அந்தச் சக்தியை நமக்குப் புரியவைப்பதற்காக லட்சுமி,

சிம்மவாகினியாகிய, துர்க்கை, சரஸ்வதி என்று ஒன்பது இரவுகள் வழிபாடு செய்கிறோம்.

இந்த முப்பெருந்தேவியரைப் புரட்டாசி மாதம் பிரதமை திதி முதல் நவமி வரை விரதம்இருந்து கொலு வைத்து வழிபடுவதுதான் நவராத்திரிவிழா ஆகும். கோடை மாறி குளிர் முகில் தவழும் மழைக்காலத்தின் தொடக்கத்தில் ஒப்புயர்வற்ற ஒரே சக்தியை மூன்று வடிவில் மூன்று மூன்று நாட்கள் பெருமைப் படுத்தி இவ்விழாவைக் கொண்டாடுகிறோம். இந்த நாட்களில்

**''சகல செல்வங்களும் தரும் இமய கிரிராச**
**தனயை மாதேவி நின்னைச்**
**சத்யமாய் நித்ய முள்ளத்தில் துதிக்கும் உத்**
**தருமருக்கு இரங்கி மிகவும்**
**அகிலமதில் நோயின்மை கல்வி தனதானியம்**
**அழகு புகழ் பெருமை இளமை**
**அறிவு சந்தானம் வலிவு, துணிவு, வாழ்நாள்வெற்றி**
**ஆகுநல் ஊழ் நுகர்ச்சி**
**தொகை தரும் பதினாறு பேறும்த ந்தருளி நீ**
**சுகானந்த வாழ்வளிப்பாய்**
**சுகிர்த குணசாலி! பரிபாலி! அநுகூலி!திரி சூலி! மங்கள விசாலி!**
**மகவு நான் நீ தாய் அளிக்கொணாதோ? மகிமை**
**வளர் திருக்கடவூரில் வாழ்**
**வாமி! சுபநேமி! புகழ்நாமி! சிவசாமி மகிழ்**
**வாமி! அபிராமி! உமையே!''**

என்னும் அபிராமிபட்டர் அருளிய அபிராமியம்மை பதிகங்கள், அபிராமி அந்தாதி ஆகியவற்றைப்பாடி அம்மன் அருள்பெறலாம்.

**சிவராத்திரி**

சிவபெருமான் பிரபஞ்சம் முழுவதையும் ஒடுக்கித் தானே ஏகமாய் நிற்கும் காலம் சிவராத்திரி ஆகும். ஒடுங்கிய உலகத்தை மீண்டும் தோற்றுவிப்பதற்காகச் சிவன் இலிங்கமாய் நின்று சக்தியைத் தோற்றுவிக்க சக்தி சிவ பிரானை வணங்க அவர் இலிங்கோற்பவராக தோன்றி முத்தேவரையும் படைத்து, படைத்தல் தொழிலை ஆரம்பித்தார்.

அரியும் அயனும் தங்களுக்குள் யார் பெரியவர் என போட்டியிட அவர்களுக்காக ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ்சோதியாகக் காட்சி அளித்தார் சிவபெருமான். அந்த இரவே சிவராத்திரியாகக் கொண்டாடப்படுகிறது. அன்றையதினம் ''நமசிவாய'' என்னும் பஞ்சாட்சரமந்திரத்தை ஓத வேண்டும். திருமுறைகளைப் பாராயணம் செய்து சிவனை வழிபட வேண்டும். சிவராத்திரியானது நித்ய சிவராத்திரி, பட்சசிவராத்திரி, மாத சிவராத்திரி யோக சிவராத்திரி, மகாசிவராத்திரி என ஐந்து வகைப்படும்.

**பங்குனி உத்திரம்**

பங்குனி மாதம் பூரணச் சந்திரன் உத்திரநட்சத்திரத்தில் இருக்கும் போது இவ்விரதம் கொண்டாடப்படுகிறது. ஒவ்வொரு மாதத்திலும் ஒவ்வொரு நட்சத்திரத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து விழாக்கள் நடத்துவதும் விரதம் இருப்பதும் வழக்கம். ஆனால் பங்குனி உத்திரநட்சத்திரத்துக்கு மற்ற நட்சத்திரங்களைவிட அதிக மகத்துவம் உண்டு.

தெய்வத்திருமணங்கள் அதிகம் நடைபெற்ற மாதம் பங்குனி என்று புராணங்கள் கூறுகின்றன. பன்னிரண்டாவது மாதமான பங்குனியும், பன்னிரண்டாவது நட்சத்திரமான உத்திரமும் இணையும் புனிதநாள் பங்குனி உத்திரம். இந்நாளில்தான் அம்பாளுக்கும் அரனாருக்கும் திருமணம் நடந்ததாகக் கூறுவர். காஞ்சியில் அம்பிகை 32 அறங்களையும் சிவ பூஜைகளையும் இடைவிடாது செய்து இறைவனுடன் இணைந்த நிகழ்ச்சியை நினைவூட்டும் வகையில் திருமண விழாவாகக் கொண்டாடப்படுகிறது. புன்னைமரச் சூழலில் மயிலுருவில் உமையன்னை ஈசனைப் பூசனை செய்து மணம் புரிந்த திருத்தலம் மயிலை. அங்கு நடைபெறும் மடநல்லார் மாமயிலை திருவிழாக்களை ஞானசம்பந்தர் தம் பதிகத்தில் வரிசையாக அருளிச்செய்துள்ளார். அதில்

**''மலிவிழா வீதி மடநல்லார் மாமயிலைக்**
**கலி விழாக் கண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்**
**பலி விழாப் பாடல் செய்பங்குனி உத்திரநாள்**
**ஒலி விழாக் காணாதே போதியோ பூம்பாவாய்''**

என்பது பங்குனி உத்திரவிழா பற்றி அவர் கூறும் பாடல். இப்பங்குனி உத்திரநாளே முருகப் பெருமான். தெய்வானை திருமணம், மதுரை மீனாட்சி, சுந்தரேஸ்வரர் திருமணம், இந்திரன், இந்திராணி திருமணம், ஸ்ரீராம பிரான், அவருடைய சகோதரர்கள் திருமணம் ஆகியதெய்வத் திருமணங்கள் நடந்த நாளாகும்.

''இன்றோ திருவாடிப்பூரம் எமக்காகவன்றோ
இங்கு ஆண்டாள் அவதரித்தாள் குன்றாத
வாழ்வான வைகுந்தவான் போகந்தன்னையிகழ்ந்து
ஆழ்வார் திருமகளராய்''

- மணவாள மாமுனிவர்

பாண்டிய நாட்டில் திருவில்லிபுத்தூரில் பெரியாழ்வாருடைய துளசித்தோட்டத்தில் தோன்றியவளாய் பூமி தேவியின் அவதாரமாகத் திருவாடிப்பூரத்தில் அவதரித்தவளான, சூடிக்கொடுத்த சுடர்க்கொடி ஆண்டாள், ஸ்ரீரெங்கமன்னார் திருமணம் நிகழ்ந்தநாள் பங்குனி உத்திரம் சுந்தர மூர்த்திநாயனாருக்கு இறைவன் மணக் கோலத்தில் காட்சி கொடுத்தநாள், காரைக்கால் அம்மையார் முக்திபெற்ற நாள் ஆகிய சிறப்புகளும் பங்குனி உத்திரத்திற்கு உண்டு. தெய்வத் திருமணங்கள் நடந்தேறிய சீரும் சிறப்பும் வாய்ந்த பங்குனி உத்திரவிழா மக்களால் சிறப்புடன் போற்றப்படுகிறது.

### பாவை நோன்பு

மார்கழிமாதம் இறைவழிபாட்டிற்கு உகந்தமாதம். பகவத்கீதையில் கண்ணபிரான் மாதங்களில் நான் மார்கழியாய் இருக்கிறேன் என்கிறான். மார்கழி மாத வைகறைப் பொழுதில் கன்னிப்பெண்கள் நீராடி நோன்பு நோற்று இறைவனைப் பாடித்துதிப்பர். யாப்பருங்கல விருத்தியுரையின் பாடல் ஒன்று

''கோழியும் கூவின குக்கில் அழைத்தன
தாழியுள் நீலத் தடங்கணீர்! போதுமினோ
ஆழி சூழ்வையத்து அறிவன் அடியேத்தி
கூழை நனையக் குடைந்தும் குளிர்புனல்
ஊழியுள் மன்னுவோம் என்றேலோர் எம்பாவாய்''

மார்கழி நீராடலை அடிப்படையாகக் கொண்டு பாவைப் பாடல்கள் தோன்றின. கண்ணனைக் கணவனாகப் பெறவேண்டி ருக்மணி பாவை நோன்பு மேற்கொண்டாள் என்பதனை **''கண்ணியம் துளவு ஆடும் கண்ணனே கணவனாகக் கன்னி நீயருள் செய்கென்னா''** என்று பாகவதம் கூறுகிறது. மாயோன் கண்ணபிரானாகத் தோன்றி ஆயர்பாடியில் இருந்தபோது அவனையே கணவனாகப் பெற வேண்டி ஆண்டாள் நோன்பு நோற்றுப் பாடிய பாடல்களே திருப்பாவை ஆகும். திருப்பாவையின் 2ஆம் பாடல்

''வையத்து வாழ்வீர்கள்! நாமும் நம் பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுள்
பையத்துயின்ற பரமன் அடிபாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி
மையிட்டெழுதோம் மலரிட்டு நாம் முடியோம்
செய்யாதன செய்யோம் தீக்குறளைச் சென்றோதோம்
ஐயமும் பிச்சையும் ஆம் தனையும் கைகாட்டி
உய்யுமாறெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய்''

இப்பாடலில் பாவை நோன்பு சுட்டப்படுகின்றது. கன்னிப் பெண்கள் மார்கழி நீராடி, மகிழ்ந்து பாடும் பாடல்களாக மாணிக்கவாசகர் அருளிச்செய்தவை திருவெம்பாவை - திருப்பள்ளி எழுச்சிப்பாடல்களாகும். இறைவனது விழா நாளில் ஆடும் நீராட்டுக்குரியதாய்ச் செய்தருளிமையின் அதனைத் தமக்கேயன்றி அம்மகளிர்க்கும் உலகினர் பிறர்க்கும் பயன்படுக என்னும் கருணை காரணமாக அங்ஙனம் செய்தருளியது என்பர். சித்தாந்தக் கருத்துப்படி ஆன்மாக்கள் ஆணவமல இருளில் கிடந்து உறங்காமல் திருவருள் வெள்ளத்தில் மூழ்கச் செய்வது ஆகும். ''மலவிருள் உற்று உறங்காமல் மன்று பரிபாகர் அருள்சலமுழுக வருக எனச் செப்பல் திருவெம்பாவை'' என்று திருப்பெருந் துறைப்புராணம் கூறும். மார்கழியில் நோற்கப்படும் பாவை நோன்பு விரதங்களில் முக்கியத்துவம் பெறுகிறது.

### வரலட்சுமி விரதம்

கன்னிப் பெண்கள் முதல்திருமணமான சுமங்கலிப் பெண்கள் வரை வரலட்சுமிவிரதம் இருந்து திருமகள் அருளைப் பெறுகின்றனர். ஆவணி மாதம் பௌர்ணமிக்கு முன்பு வரும் வெள்ளிக் கிழமையில் இவ்விரதம் கடைப்பிடிக்கப்படுகிறது.

வண்ணச் சரபம் ஸ்ரீமத் தண்டபாணி சுவாமிகள் திருமகள் அந்தாதி என்கிற தனது நூலில் அடங்கியுள்ள முதல் பாடல் **''திருமகளே''** எனத் தொடங்கி இறுதிப் பாடலும் **''திருமகளே''** என முடிகிறது. இப்பாடல்களை தினமும் பாராயணம் செய்தால் இல்லத்தில் லட்சுமி தேவியின் அருள் பொங்கும். ஞானம், செல்வம், புகழ், மனஉறுதி, உணவு, வீரம், நன்மக்கட்பேறு ஆற்றல் ஆகிய எட்டும் நமக்கு கிட்டும்.

''திருமகளே! திருப்பாற்கடல் ஊடு
அன்று தேவர்தொழ
வருமகளே! உலகு எல்லாமும்
என்றென்றும் வாழவைக்கும்
ஒருமகளே! நெடுமால் உரத்தே
உற்றுவரம் பெரிது
தருமகளே! தமியேன் தலைமீது நின்ற
தாள்வையே!

என்ற முதல் பாடலையும்

தனிப்புறு யோகமும் முயன்று ஆதரித்து
தழைமலர்பெய்த
இன்புறு தோத்திரமும் செய்யவல்லர்க்கு
எத்திசையும்
தொனிப்புறு கீர்த்தி நல்கி கலியாகிய
துன்பொழித்துச்
செனிப்புறு கன்மமும் தீர்ப்பாள் கமலத்
திருமகளே!

என்ற நூறாவது பாடலையும் பாடி விரதத்தை அனுட்டிக்கலாம்.

மாங்கல்யம் நிலைத்து நிற்க இந்த வரலட்சுமி விரதம் கொண்டாடப்படுகிறது. அன்பு, கீர்த்தி, சாந்தி, இன்பம், வலிமை ஆகிய ஐந்து சக்திகளும் வரலட்சுமியின் அம்சம் ஆகும். அவள் தாமரைப் பூவில் வாசம் செய்பவள். நம்மாழ்வார் தாமரையைத் திருமாலுடன் சேர்த்து புகழ்ந்து

''தேநீர் கமலக் கண்கள்
பேரிதழ் தாமரைக் கண் கனிவாய்
செந்தாமரைக் கண் செங்கனிவாய்
பெருத்தண்தாமரைக் கண்
என் அரங்கத்து இன்னமுதர் குழலழகர்''

என்று பாடுகிறார்.

வரலட்சுமிவிரதம் மேற்கொள்ளும் போது தேவிக்கு தாமரைப் பூவை சமர்ப்பிக்க வேண்டும். திருமாலிடம் நம்மைக் கொண்டு போய்ச் சேர்ப்பவள் திருமகள். பூவின், திருவின் அழகின் புனைகலத்தை யாவர்க்கும் செல்வத்தை வீடு என்னும் இன்பத்தை, ஆவித் துணையை, அமுதில் பிறந்தாளை வேண்டி இவ்விரதத்தைக் கடைப்பிடிப்போம்.

**பிரதோச விரதம்**

ஒவ்வொரு மாதமும் வளர்பிறை தேய்பிறை என்ற இரண்டுபட்சங்களிலும் வரும் திரியோதசி திதியன்று வருவது பிரதோசமாகும். அன்று மாலை 4.30 மணி முதல் 6.00 மணிவரை உள்ளகாலம் பிரதோச காலமாகும். வைகறையில் எழுந்து நீராடி சிவாலயம் சென்று வழிபாடு செய்ய வேண்டும். நமசிவாய என்னும் பஞ்சாட்சர மந்திரத்தை மனமுருகி ஓத வேண்டும். பன்னிரண்டாம் திருமுறையாம் பெரிய புராணத்தில் சேக்கிழார் திருவைந்தெழுத்தைக் ''**கருத்தின் பயனாகக் கொள்ள வேண்டும்**'' என்றும், ஞானமெய்ந்நெறி தான் யாவர்க்கும் நமசிவாயச் சொல்லாம் என்றும், **ஆதிமந்திரம் அஞ்செழுத்து** என்றும் அருளிச் சிறப்பிப்பார்.

''அஞ்செழுத்தே ஆகமமும் அண்ணல்
அருமறையும்
அஞ்செழுத்தே ஆதிபுராணம்
அனைத்தும்- அஞ்செழுத்தே
மானந்த தாண்டவமும் யாவைக்கும்
அப்பாலா
மோனைத்தா மாமுத்தியும்''

பிரதோசகாலத்தில் கோவிலுக்குச் சென்று இறைவனை வழிபட்டுத் திருமுறைகளைப் பாட வேண்டும். பிரதோசம், நித்திய பிரதோசம், பட்சப்பிரதோசம், மாதப்பிரதோசம், மகாபிரதோசம், பிரளபிரதோசம் என ஐந்து வகைப்படும்.

**ஏகாதசி விரதம்**

மார்கழி மாதம் சுக்கில பட்சத்தில் வரும் ஏகாதசி வைகுண்ட ஏகாதசியாகும். அன்று உண்ணா நோன்பு இருந்தால் திருமாலின் திருவருளைப் பெறலாம். அவர் வைகுண்ட லோகத்தில் எழுந்தருளியிருக்கும் காட்சியைக் காணலாம். அன்று வைணவத்தலங்களில் சிறப்பு வழிபாடுகள் நடைபெறும். வைகுண்ட ஏகாதசி நாளில் ஸ்ரீரெங்கத்தில் சொர்க்க வாயில் புகும் திருவிழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

முடிவுரை

உடலையும் உள்ளத்தையும் பாதுகாத்து மக்கள் பெற வேண்டிய அறம் பொருள், இன்பம், வீடு, ஆகிய நான்கு பேறுகளையும் அளிக்கவல்லவை விரதங்கள். நம் முன்னோர்கள் நம் வாழ்க்கையில் ஒவ்வொன்றையும் திட்டமிட்டே நடைமுறைப்படுத்தினர். விரதங்களை ஒழுங்காகக் கடைப்பிடித்தால் பாவங்கள் நீங்கும். மனம் பக்குவம் பெறும். தலயாத்திரையும், தீர்த்தயாத்திரையும் மனிதனுக்கு ஆன்ம ஞானம் ஏற்பட வழிவகை செய்கின்றன. அதேபோல் பண்டிகைகளும், விரதங்களும் மங்களகரமான வாழ்விற்கு வழிகாட்டியாய் விளங்குகின்றன. எனவே விரதங்களை மேற்கொண்டு இறைவன் திருவருள் பெறுவோம்.

# நூல் அறிமுகம்

## "ஆன்மிகப் பயணத்தில் ஆயிரத்தெட்டு லிங்கங்கள்"





ஆயிரம் என்பது எண்ணிக்கையற்றனதக் குறிக்கும் எண்ணாகும். எண்ணிலடங்கா பெருமைகளையும் சிறப்பியல்புகளையும் கொண்ட சிவபெருமானை ஆயிரம் எண்ணிக்கை கொண்ட லிங்கவடிவில் எழுந்தருளச் செய்து வழிபட்டு வருவது தொன்மைக் காலம் முதலே இருந்து வந்துள்ளது. பல்லவர்கள் சில இடங்களில் ஆயிரம் லிங்கங்களை கொண்ட கோயில்களை அமைத்திருந்ததைக் கல்வெட்டுகள் மூலம் அறிகிறோம். பாரததேசமெங்கும் பல இடங்களில் 1008 லிங்க வழிபாடு இருந்து வந்துள்ளது.

கடல் கடந்த நாடான கம்போடியாவில் உள்ள 1008 லிங்க வழிபாட்டை விளக்கும் வகையில் திரு. இராமநாதன் பழனியப்பன் அவர்கள் இந்நூலை எழுதியுள்ளார். மிக அருமையான பயண நூல். கட்டுரையின் மொழி நடையும் படங்களும் நாமும் உடன் பயணம் மேற்கொள்வதைப் போன்ற உணர்வை ஏற்படுத்துகின்றன.

கம்போடியாவில் ஃபெனாம் கூலேன் என்ற மலையில் உற்பத்தியாகி ஓடிவரும் சியாம்ரிப் என்னும் ஆற்றின் படுகையில் இந்த லிங்கங்கள் அமைந்துள்ளன. 8 அடக்கு 8 அடி சதுரத்துக்குள் பெரிய வட்டமாக மகாலிங்கம் அமைந்துள்ளது. அதைச் சுற்றி 1008 லிங்கங்கள் உள்ளன. இந்த லிங்கங்களின் உயரம் மிகக் குறைவே. நதிநீர் லிங்கங்களை மூழ்கடித்துக் கொண்டு ஓடுகிறது. இத்தலத்திற்குச் சென்றதுடன் அங்கு சிறப்பான பூசைகளை வேள்விகளுடன் ஆற்றியுள்ளனர். அப்பூசையில் எடுக்கப்பட்ட படங்கள் கண்களைக் கவரும் வகையில் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. அத்துடன் ஒப்புநோக்க நம் ஊர் நதிப்படுகைகளில் உள்ள சிவலிங்கங்களின் படங்களையும் இணைத்திருப்பது பாராட்டுக்குரியது.

இந்நூல் கிடைக்கும் இடம் : 3362 ஏஎக்ஸ்-11 வது மெயின் ரோடு, அண்ணா நகர் மேற்கு, சென்னை - 40

## ஆறுமுக அந்தாதி




கலைமாமணி, பத்மஸ்ரீ கவிஞர் வாலி தமக்கென்று வகுத்துக் கொண்டிருக்கும் தனி பாணியில் கந்தனைப் பாடி களிப்புற்று வெளியிட்டிருக்கும் நூல் "ஆறுமுக அந்தாதி". எளிய தற்காலத்துக்கேற்ற பதங்களால் ஆக்கப்பட்டுள்ள இந்நூல் கந்தனை கண் முன்னே நிறுத்துகிறது.

ஒவ்வொரு பாடலிலும் ஏராளமான புராணச் செய்திகள் இடம் பெற்றுள்ளன. மாலன் மருமகனாம் என்று திருமாலோடு தொடங்கும் இந்நூல் துள்ளு நடையிட்டு ஆற்று பிரவாகம் போல் இயல்பான ஓட்டத்துடன் பக்திச்சுவை நனி சொட்டச்சொட்ட நடைபோடுகிறது.

கவிஞரின் கரைகடந்து ஓடும் கற்பனை மிகுந்த பக்தியாற்றுக்கு இருபுறமும் சோலை சூழ்ந்து அணி செய்வது போல் பெரும்புலவர் ம.வே.பசுபதி அவர்களின் வர்ணனை உரை அமைந்துள்ளது. கவிஞரின் கவிச் சொற்களுக்கு விரிவான உரையை தம் ஆழ்ந்த புலமையால் அகல எடுத்து உரைத்திருக்கின்றார். வாழ்க்கைத் தத்துவங்களை ஆங்காங்கு சிறப்பான முறையில் விளக்கியிருப்பது அருமை. நல்ல நயம்பட உரைத்த உரையாக இது மிளிர்கிறது.

விகடன் பிரசுரமாக நேர்த்தியான அமைப்புடன் இந்நூல் வெளிவந்துள்ளது.

ஆசிரியர் : கவிஞர்வாலி, விலை : ரூ.95, பக்கங்கள் : 318

கிடைக்குமிடம் : விகடன் பிரசுரம், 757, அண்ணா சாலை, சென்னை - 600002

# ஆலங்குடி அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரர்

வற்றாத நீரும் வளம் கொழிக்கும் காவிரியும் முற்றாத வாழை முகம் பார்க்கும் கொள்ளிடமும், வெண்ணாற்றிடை உயர்ந்த வீர தமிழ் சுவையும் கண்ணார காண்கின்ற கன்னி தமிழகமாம் சோழ வளநாட்டில், திருவாரூர் மாவட்டத்தில், வலங்கைமான் வட்டத்தில், ஆலங்குடி என்னும் ஊரில் இத்திருத்தலம் அமைந்துள்ளது.. சோழ வளநாட்டில் உள்ள தேவாரபாடல் பெற்ற 274 தலங்களில் காவிரிக்கு தென் கரையில் உள்ள 127 தலங்களில் 98 வது தலமாக விளங்குகிறது இத்திருத்தலம். திருவாரூர் மாவட்டத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற குருபரிகாரஸ்தலமாகிய ஆலங்குடி மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் முப்பெருமைகளையும் கொண்டது.

**இப்பிடம் :** திருவாரூர் மாவட்டத்தில், வலங்கைமான் வட்டத்தில், நீடாமங்கலம் இரயில் நிலையத்திற்கு வடக்கே ஏழு கிலோமீட்டர் தொலைவிலும். கும்பகோணம் மன்னார்குடி (நீடாமங்கலம் வழி) பேருந்து மார்க்கத்தில் கும்பகோணத்தில் இருந்து தெற்கே 17 கிலோ மீட்டர் தொலைவிலும் இத்திருத்தலம் அமைந்துள்ளது.



**தல வரலாறு :** இத்திருத்தலம் காவிரி நதியின் கிளை நதியான வெட்டாறு கரையிலிருந்து 1 காத தூரத்தில் அமைந்துள்ளது. பார்க்கடல் கடைந்த போது உண்டான ஆலகால விஷத்தை உண்டு தேவர்களை ஆபத்திலிருந்து காத்து இரட்சித்தமையால் ஆபத்சகாயர் என்ற பெயர் இறைவனுக்கு ஏற்பட்டது. இவ்வூருக்கு ஆலங்குடி என்ற பெயரும் ஏற்பட்டது. அசுரர்களால் தேவருக்கு நேர்ந்த இடுக்கண்களை களைந்து காத்தமையால் இத்தல விநாயகருக்கு கலங்காமற் காத்த விநாயகர் என பெயர் உண்டாயிற்று. அம்மையார் தவம் செய்து இறைவனை திருமணம் செய்து கொண்ட சிறப்பை உடையது. அம்மை திருமணம் நடந்த இடத்திற்கு இன்று திருமண மங்கலம் எனப் பெயர் வழங்கப்பெறுகிறது. மத்தியார்சுனம் ஆகிய திருவிடைமருதூர் மகாலிங்கபெருமானுக்கு பரிவாரத்தலமாக விளங்குகிறது. பஞ்சஆரண்ய தலங்களில் நான்காவதாக சாயரட்சைக்கு உகந்த திருத்தலமாக விளங்குகிறது. முசுகுந்த சக்கரவர்த்தியின் அமைச்சர் சிவ பக்தரான அமுதோகர் என்பவரால் நிர்மாணிக்கப்பட்டதாகும் இத்திருக்கோயில். அமைச்சர் செய்த சிவ புண்ணியத்தில் பாதியேனும் மன்னருக்கு தத்தம் செய்து தரும்படி கேட்க மறுத்த அமைச்சருக்கு சிரச்சேதம் ஏற்பட்டது. இதன் விளைவால் அரசனுக்கு தோஷங்கள் ஏற்பட இத்தல மூர்த்தியை வணங்கி வழிபட்டு தோஷ நிவர்த்தி செய்ததாக வரலாறு கூறுகிறது.

**தல மூர்த்திகள்**

அருள்மிகு கலங்காமற் காத்த விநாயகர். அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரர், காசி ஆரண்யேஸ்வரர். அருள்மிகு ஏலவார்குழலி அம்மை, உமையம்மை. அருள்மிகு குருதெட்சிணாமூர்த்தி.

**தலச்சிறப்பு**

திருஇரும்பூளை மற்றும் ஆலங்குடி என்ற பெயர்களால் விளங்கப்பெறுவது. திருஞானசம்பந்த பெருந்தகையால் எழிலார் இரும்பூளை என அருளப்பெற்றது. பார்க்கடல் கடைந்த போது உண்டான ஆலகால விஷத்தை உண்டு தேவர்களை ஆபத்திலிருந்து காத்து இரட்சித்தமையால் ஆபத்சகாயர் என்ற பெயர் இறைவனுக்கு ஏற்பட்டது. இவ்வூரில் விஷத்தால் எவருக்கும் யாதொரு தீங்கும் ஏற்பட்டதில்லை. இது இன்றளவும் நடைபெற்று வரும் கண்கூடான உண்மையாகும்.

நவக்கிரகங்களில் உள்ள குருபகவானுக்கு பரிகாரஸ்தலமாகும்.

தல விருட்சம் : பூளைச்செடி.

காலம் :இத்தலத்து இறைவன்(சிவன்) சுயம்பு மூர்த்தியாக எழுந்தருளியுள்ளார் எனவே இத்திருக்கோயிலின் காலத்தை நிர்ணயிக்க இயலவில்லை. ஞானசம்பந்தரின் காலம் கி.பி. ஆறு, ஏழு நூற்றாண்டாகும். எனவே அதற்கு முன்னரே இவ்வாலயம் இருந்ததாக கருத்தில் கொள்ளலாம்.

வழிபட்டோர் : விஸ்வாமித்திரர், அஷ்டதிக்பாலகர்கள், அகஸ்தியர், புலஸ்தியர், காகபுஜண்டர், சுகர்பிரம்ம மகரிஷி மற்றும் ஆதிசங்கரர் ஆகியோர் பூஜித்த திருத்தலம் ஆகும். அம்மையின் திருமணத்திற்கு வந்த திருமால், பிரம்மா, இலக்குமி, கருடன், ஐயனார், வீரபத்திரர் முதலானோர் தம் தம் பெயரால் லிங்கங்கள் நிறுவி பூஜித்து வழிபட்ட தலம். முசுகுந்த சக்கரவர்த்தி, சுவாசனன் மற்றும் சுந்தரர் வழிபட்ட தலமுமாகும். திருஞானசம்பந்தரால் பதிகம் பெற்றது. அப்பர் அடிகளால் திருவீழிமிழலைத் திருத்தாண்டகத்தில் சேர்த்துப் பாடல் பெற்ற சிறப்புடையது. திருஞானசம்பந்தர் தமது பாடல்களால் இத்தலத்தை சிறப்பித்து இரண்டாம் திருமுறையில் பாடியுள்ளார்.

**தீர்த்தங்கள் :** இத்திருத்தலத்தை சுற்றி 15 தீர்த்தங்கள் உள்ளன. முக்கியமாக திருக்கோயிலை சுற்றி அகழியாக அமைந்துள்ள அமிழ்த புஷ்கரணி எனும் தீர்த்தம் மிகவும் சிறப்புடையதாகும்.

பிரம்ம தீர்த்தம், இலக்குமி தீர்த்தம், இந்திர தீர்த்தம், அக்னி தீர்த்தம், யம தீர்த்தம், நிருதி தீர்த்தம், வருண தீர்த்தம், வாயு தீர்த்தம், குபேர தீர்த்தம், ஈசான தீர்த்தம், சூரிய தீர்த்தம், சந்திர தீர்த்தம், அமிழ்த புஷ்கரணி, ஞான கூபம் கிணறு, பூளை வள ஆறு ஆகிய 15 தீர்த்தங்கள் உள்ளன.

**வழிபாடும் வழிபடும் முறைகளும்**

இத்திருக்கோயிலுக்கு 14 தலைமுறைகள் புண்ணிய பேறு பெற்றவர்களே வருகை தர இயலும். முதலில் கலங்காமற் காத்த விநாயகரை வணங்கி பின்னர் கொடி மரம் சென்று அங்குள்ள துவஜ கணபதியை வணங்கி நேராக சென்று சுவாமியை (ஆபத்சகாயேஸ்வரர்) தரிசித்து பின்னர் குரு தெட்சிணாமூர்த்தியை வணங்கி சங்கல்பம் செய்து அர்ச்சனை முதலியவைகளை முடித்து பிரகாரத்தில் உள்ள சோமாஸ்கந்தர், முருகன், மகாலெட்சுமி, துர்க்கை, சண்டிகேஸ்வரர், நவக்கிரகங்கள், உற்சவர் குருமூர்த்தி முறையே வழிபட்டு, ஏலவார் குழலி அம்மை மற்றும் சனிபகவானை தொழுது கொடிமரத்தில் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்வித்தல் வேண்டும். பின்னர் குருபரிகாரமாகிய இருபத்து நான்கு நெய் தீபங்களை தீபம் ஏற்றும் இடத்தில் ஏற்றி திருக்கோயிலை மூன்று முறை வலம் வந்து ஒவ்வொரு முறையும் கொடி மரத்தின் கீழ் வீழ்ந்து நமஸ்காரம் செய்து பரிகாரத்தை நிறைவு செய்தல் வேண்டும்.

**தினசரி மற்றும் சிறப்பு பூஜைகள்**

தினசரி நான்கு கால பூஜைகள் நடைபெறுகிறது. 1. காலசந்தி காலை 8.00 மணி முதல் 8.30 மணி வரை 2. உச்சிக்காலம் மதியம் 12.30 மணி முதல் 1.00 மணி வரை, 3. சாயரட்சைமாலை 5.30 மணி முதல் 6.00 மணி வரை, 4. அர்த்தசாமம் இரவு 8.30 முதல் 9.00 மணி வரை

இத்திருக்கோயிலில் தினசரி அருள்மிகு குருபகவானுக்கு கீழ்கண்ட விவரப்படி மூலவருக்கும் உற்சவருக்கும் அபிஷேகம் நடைபெறுகிறது. மூலவருக்கு அபிஷேக கட்டணம் ரூ 800.00 (ரூபாய் எண்ணூறு மட்டும்), உற்சவருக்கு அபிஷேக கட்டணம் ரூ. 300.00 (ரூபாய் மூன்று நூறு மட்டும்) செலுத்தி பக்தர்கள் அபிஷேகம் செய்து குருவருள் பெற வேண்டுகிறோம்.

**விவரம் :** அருள்மிகு மூலவர் குரு அபிஷேகம் தினசரி அதிகாலை 6.00 மணி முதல் 7.00 மணி வரை. அருள்மிகு உற்சவர் குரு அபிஷேகம். காலை 8.00 மணி முதல் 8.30 மணி வரை. பகல் 12.00 மணி முதல் 12.30 மணி வரை. மாலை 5.00 மணி முதல் 5.30 மணி வரை.

மூலவர் குருமூர்த்திக்கு அதிகாலையில் மட்டுமே அபிஷேகம் நடைபெறும் மற்ற நேரங்களில் உற்சவர் குருமூர்த்திக்கு அபிஷேகம் நடைபெறும்.

அபிஷேகத்தில் கலந்து கொள்பவர்களுக்கு அருள்மிகு குருபகவான் உருவம் பதித்த இரண்டு கிராம் வெள்ளியிலான டாலர் பிரசாதமாக வழங்கப்படும்.

சகஸ்ரநாம அர்ச்சனை செய்பவர்களுக்கும் அருள்மிகு குருபகவான் உருவம் பதித்த இரண்டு கிராம் வெள்ளியிலான டாலர் பிரசாதமாக வழங்கப்படும்.

திருவிழாக்கள் : பஞ்சபருவ உற்சவம், மாதாந்திர குருவாரம் தோறும் விஷேசதரிசனம், குருபகவான் ஒரு இராசியிலிருந்து மற்றொரு இராசிக்கு பிரவேசிக்கும் குருபெயர்ச்சி விழா (குருபெயர்ச்சியை முன்னிட்டு குருபகவானுக்கு இலட்சார்ச்சனை விழாவும் சிறப்பாக நடைபெறுகிறது.

மாசி மகா குருவாரதரிசன விழா,

ஆயிரத்தெட்டு சங்காபிஷேக விழா

சித்திரா பௌர்ணமியை முன்னிட்டு பத்து நாள் பெருந்திருவிழா பத்தாம் தினத்தன்று குருபகவான் தேர்திருவிழாவும் நடைபெறுகிறது.

# மார்கழியில் அரன் அருள் பெற்ற நாயன்மார்கள்



இயற்பகை நாயனார் - மார்கழி - உத்திரம்



சடைய நாயனார் - மார்கழி - திருவாதிரை



சாக்கிய நாயனார் - மார்கழி - பூராடம்



மானக்கஞ்சாற நாயனார் - மார்கழி - சுவாதி



வாயிலார் நாயனார் - மார்கழி - ரேவதி

# திருமாலடியார்களும் திருவரங்கனும்

முனைவர் . ஏ.பரந்தாமன்

சென்ற இதழ் தொடர்ச்சி...

*பாசுரம் - 3*

**''தொண்டர் சேவடிச் செழுஞ்சேறு என் சென்னிக்கு அணிவனே''**

கண்ணனெம் பெருமானின் தாய் மாமனாகிய கும்பர் ஏழு எருதுகளை சிறந்த தீனி கொடுத்து கொழு கொழு என வளர்த்து வந்தார். அந்த ஏழு எருதுகளையும் ஒரே நேரத்தில் யார் அடக்குகிறார்களோ அவர்களுக்கே தன் மகள் நப்பின்னையை மணம் செய்து தருவதாக உறுதி கூறிவந்தார்.

கண்ணபிரான் நப்பின்னைப் பிராட்டியை மணக்க விரும்பி அந்த ஏழு எருதுகளையும் ஒரே நேரத்தில் அடக்கி நப்பின்னையை மணந்தார்.

இரணிய கசிபுவின் தம்பி இரண்யாக்கதன் பூமியை எடுத்துச் சென்று ஆழ்கடலின் கீழே வைத்துவிட்டான். பூமிப்பிராட்டியின் வேண்டுதலுக்கிணங்க, திருமால் வராக அவதாரம் எடுத்து, ஆழ்கடலுக்குள் சென்று, இரண்யாக்கதனைக் கொன்று, பூமியை தன் கொம்பினால் மேலே கொணர்ந்து வைத்து, பூமிப்பிராட்டியைக் காத்தருளினார். **''பன்றியாய் அன்று பாரகம் கீண்ட பாழியான் ஆழியான்''** எனும் திருமங்கையாழ்வார் வாக்கு இங்கு நோக்கத்தக்கதாகும்.

இராமனாய் அவதாரம் செய்து, நல்லோர்களுக்குத் தீமைசெய்த, இராவண அரக்கர் குலத்தைப் பூண்டோடு அழித்து, நல்லோரைக் காத்தருளினான். **''ஒருவில்லால் ஓங்கும் முந்நீர் அடைத்து செருவிலே உலகங்கள் உய்யச் அரக்கர் கோனைச் செற்ற நம் சேவகனார்''** எனும் தொண்டராடிப் பொடியாழ்வார் அருளிச் செயல் இங்கு காணத்தக்கதாகும்.



மாவலிச் சக்ரவர்த்தி இம்மண்ணுலகை ஆள்வதோடன்றி விண்ணுலகையும் ஆளவிரும்பி, இந்திரபதவியை அடைய யாகம் செய்தான். இதனால் வருந்திய இந்திரன் திருமாலை சரணடைந்தான். இந்திரனின் இந்திர பதவியைக் காக்க மாவலியின் யாகத்திற்கு தடை செய்ய விரும்பிய திருமால் வாமனனாக அவதாரம் செய்து, மாவலியிடம் சென்று தன் காலால் அளந்து கொள்ள மூன்றடி மண் கேட்டுப் பெற்றவன். **''குறட்பிரம்ம சாரியாய் மாவலியை குறும்பு அதக்கி அரசுவாங்கி''** எனும் பெரியாழ்வார் அருளிச்செயல் காணத்தக்கது. ஓரடியால் இம்மண்ணுலகையும் இரண்டாம் அடியால் விண்ணுலகையும் அளந்து, மூன்றாவது அடியை மாவலியின் தலையில் வைத்து, அவனை பாதாள உலகம் அனுப்பி யாகத்தை நிறுத்தி இந்திரனுக்குப் பதவியை அளித்தான் பரந்தாமன். திருமாலாகிய திருவரங்கனின் இச்சிறப்புகளைத் தம் வாயினால் சொல்லிப் பாடிப் பாடி பரவசமடைந்தனர் திருமாலடியார்கள். அவர்கள் கண்களில் பெருகும் ஆனந்தக் கண்ணீர், காவிரி ஆற்றின் நீரோட்டம் போன்றதாக இருந்தது. அத்திருமால் அடியார்கள் திருவரங்கன் கோயில் முற்றம் சேறாகுமாறு ஆடிப்பாடினர். அத்திருமால் அடியார்கள் பாதத்தில் படிந்த அச்சேற்றினை என் நெற்றியில் திலகமாகச் சூடுவேன் என்கின்றார் குலசேகராழ்வார். ''திருமால் அடியார்களைப் பூசிக்க நோற்றார்களே'' எனும் நம்மாழ்வார் திருவாய் மொழி ஈண்டு பொருந்து வதைக் காணலாம்.

**''ஏறு அடர்த்தும் ஏனமாய் நிலம்
கீண்டதும் முன் இராமனாய்
மாறடர்த்ததும் மண்அளந்ததும்
சொல்லிப் பாடி வண்பொன்னிப்
பேராறு போல்வரும் கண்ணநீர்
கொண்டு
அரங்கன் கோயில் திருமுற்றம்
சேறு செய் தொண்டர் சேவடிச் செழுஞ்
சேறு என் சென்னிக்கு அணிவனே''**
*(பெருமாள் திருமொழி 2-3)*

தொடரும்

# வைகுண்ட ஏகாதசி

நட்சத்திரங்களில் திருவோணமும், திதிகளில் ஏகாதசியும் ஸ்ரீ மகாவிஷ்ணுவாகிய எம்பெருமானுக்கு ஏற்றவை.


ஓர் ஆண்டில் வரும் ஏகாதசிகள் இருபத்தைந்து. உத்தான ஏகாதசி, கைசிக ஏகாதசி, பீஷ்ம ஏகாதசி என்றெல்லாம் சொன்னாலும் மார்கழி மாதம் வளர்பிறையில் வரும் ஏகாதசி தனிச்சிறப்பு வாய்ந்தது. இந்த ஏகாதசியை மோட்ச ஏகாதசி என்றும் வைகுண்ட ஏகாதசி என்றும் அழைக்கின்றோம்.

ஒவ்வொரு ஏகாதசி விரதத்திற்கும் ஒரு குறிப்பிட்ட பலன் உண்டு. அனைத்து ஏகாதசிகளிலும் விரதம் இருப்பவர்களுக்கும், அது போன்று விரதம் இருக்க முடியாதவர்களுக்கு வருடத்தில் ஒருமுறையாவது வைகுண்ட ஏகாதசி நாளன்று விரதம் கடைப்பிடிப்பவர்களுக்கும், பிறப்பு, இறப்பு இரண்டிலிருந்தும் விடுதலை அளித்து ஸ்ரீமன் நாராயணன் மோட்சத்தை அளிக்கிறார் என்பதும் ஸ்ரீவைகுண்டத்திற்கு அழைத்துச் செல்கிறார் என்பதும் ஐதிகம்.

வைகுண்ட ஏகாதசி அன்று விரதம் இருந்தால் மற்ற ஏகாதசிகளுடைய பலனும் இதில் கிடைக்கிறது. அம்பரீஷர், ருக்மாங்கதன் முதலானவர்கள் ஏகாதசியின் பெருமைகளை தங்களுடைய சரித்திரங்களால் காட்டி இருக்கிறார்கள். வைணவ கோயில்களில் பிரதி மாதமும் ஐந்து நாட்கள் பெருமாள் வீதிகளில் புறப்பாடு கண்டருளுகிறார். இரண்டு ஏகாதசிகள், பௌர்ணமி, அமாவாசை, திருவோணம் இதற்கு பஞ்சபர்வ புறப்பாடுகள் என்று பெயர். மிகவும் பக்தியோடு ஏகாதசி அன்று பெருமாளைச் சேவித்தால் அவனுக்கு பகவானுடைய திருவருள் கிடைக்கும். பெரிய கோயில்களில் பகல்பத்து, இராப்பத்து என்று இருபது நாட்கள் கொண்ட உற்வசம் வருடத்திற்கு ஒரு முறை நடைபெறுகிறது. இதனை திருவத்யயன உற்சவம் என்று பெருமையாக கூறுவார்கள்.

சடம் என்று வாயுவை விரட்டியதால் சடகோபன் என்றும், உலகநியதிகளுக்கு மாறுபட்டு பிறந்த பொழுது பசி, தாகம், அழுகை, சிரிப்பு என்று இல்லாமல் இருந்ததால் மாறன் என்றும் அழைக்கப்படும் நம்மாழ்வார், ஆழ்வார்களில் முதன்மையானவர்..

நம்மாழ்வார், கடலில் இருக்கும் உப்புத் தண்ணீரை மேகங்கள் பருகி உலகில் எல்லா உயிர்களும் நன்மை பெற மழையாகப் பொழிவது போல், வடமொழி வேதங்களின் சாரத்தைத் தமிழ்ப் பாசுரங்களாக பாடி அருளினார். நான்கு வேதங்களையும், நான்கு பிரபந்தங்களாக அருளிச்





செய்த நம்மாழ்வாருக்கு பகவானை நேரில் கண்டு அவனுடைய திருவடிகளை அடைய வேண்டும்; கைங்கர்யம் செய்ய வேண்டும் என்று ஆசை. பகவானுக்கோ இவரை அடைய வேண்டும் என்று ஆசை.

வைகுண்ட ஏகாதசி நாளுக்கு முன்பு பத்து நாட்கள், பகல் பத்து உத்ஸவம். ஆழ்வார்கள் அருளிய முதல் இரண்டாயிரம் பாசுரங்களை இந்த பத்து நாளில் சேவித்து விடுவார்கள். பத்தாம் நாள் இரவு அதாவது ஏகாதசி அன்று விடியற்காலை ஸ்ரீமன் நாராயணன் பக்தர்களுக்கு சேவை சாதிக்கத் தயாராகி விடுவான். அன்று வைகுண்ட வாசலில் பெருமாளை சேவிப்பதற்குக் காத்து நிற்கும் ஆயிரக்கணக்கானவர்களுக்கும், ஆழ்வாரை ஏற்றுக்கொள்ளவும் ஸ்ரீமன் நாராயணன் தேஜோ மயமாக பரமபத வாசலில் பெருமகிழ்ச்சியோடு எழுந்தருளுவான். ஆழ்வாரும் பகவானை சேவிப்பதற்குத் தயாராக இருப்பர்.

பரமபத வாசலைத் திறந்தவுடன் பகவான் சேவை சாதிப்பான். கவலைப்படாதீர்கள். உங்களை காக்க நானே வந்து இருக்கிறேன் என்று சொல்வது போல் இருக்கும் பகவானின் காட்சி. உடனே ஆழ்வாருக்கு பகவானிடம் இருந்து மரியாதை நடைபெறும். இந்த பெருநிகழ்ச்சியில் வேதபாராயணம், தமிழ் வேதம் ஆகிய திருவாய்மொழி ஆகியவற்றை தொடங்குவர். கிடைக்கப் பெறாததை அடைந்தபடியால் பகவானுடைய திருமேனி பூரிக்கிறது. அந்த மகிழ்ச்சியைச் சிறிது ஒய்யாரமாக நடந்து பக்தர்களுக்கு காட்டுவார். அன்றைய தினத்தில் பகவானை சேவித்தால் பகவானுடைய திருவருள் முழுமையாக கிட்டும். மோட்சயிஷ்யாமி (அனைத்து பாவங்களிலிருந்தும் விடுவிக்கிறேன்) என்று சொன்ன கண்ணனே சேவை சாதிக்கிற படியால் மேன்மேலும் பல நன்மைகள் ஏற்படும்.

இந்த வைகுண்ட ஏகாதசி நாளன்று விரதத்தைக் கடைப்பிடித்து, தூயமனத்துடன் நாராயண நாமத்தை உச்சரித்து, தியானம் செய்து, இரவெல்லாம் தூங்காமல் கண் விழித்து தெய்வ சிந்தனையில் தன்னை ஈடுபடுத்தி, ஸ்ரீமன் நாராயணனைத் தரிசித்து பரமபத வாசலை வணங்கி அதன் வழியே செல்வதும், மறுநாளான துவாதசியன்று காலையில் குளித்துவிட்டு துளசித் தள தீர்த்தம் உண்டு பின்னர் உணவருந்தி ஏகாதசி விரதத்தை முடித்துக் கொள்வதும் தொன்று தொட்டு கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

அட்டையில்

## அருள்மிகு மாதவப் பெருமாள் திருக்கோயில் "மாமயிலை மாதவன்"



ஆண்டாள் திருப்பாவையில் மாதவனை கேசவனை என்று இருதிருநாமங்களால் திருமாலை விளித்து மகிழ்கிறார். அந்த இரண்டு நாமங்களாலும் இரண்டு பெருங்கோயில்களில் திருமால் சேவை சாதிக்குமிடம் திருமயிலையாகிய மயிலாப்பூர் ஆகும்.

மாதவப் பெருமாள் இருபெருந்தேவியருடன் அமர்ந்தவாறு காட்சியளிக்கின்றார். தாயார் அமிர்தவள்ளி தாயார் தீர்த்தம் சந்தானபுஷ்கரணி. உற்சவர் மாதவர் இவரைக் கல்யாணமாதவர் எனவும் அழைக்கின்றனர். வைகுண்ட வான்பதி தரும் வண் மயிலை மாதவனை இந்த மாத அட்டைப்படத்தில் கண்டு களிக்கிறோம்.

# தொடரும் திருப்பணிகள்...



கோயம்புத்தூர் மாவட்டம், மருதமலை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் நடைபெற்று வரும் பக்தர்கள் மலைக்குச் செல்லும் நடைபாதை படிக்கட்டுப் பணிகள், இராஜகோபுரத் திருப்பணிகள், மற்றும் அலுவலகக் கட்டுமானப் பணிகள் ஆகியவற்றை மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்கள் ஆய்வு செய்தார். கோவை மண்டல இணை ஆணையர் திரு. பி.ஆர். ஆசோக். அறங்காவலர் குழுத் தலைவர் டாக்டர் திரு. நல்லாபழனிச்சாமி கவுண்டர், திரு. லட்சுமணன், துணை ஆணையர் மற்றும் அலுவலர்கள் ஆய்வின் போது உடன் இருந்தனர்.




சென்னை, திருவல்லிக்கேணி தேவராஜ முதலி தெரு, அருள்மிகு எல்லையம்மன் ரேணுகா பரமேஸ்வரி திருக்கோயிலில் ரு.75 லட்சம் மதிப்பீட்டில் நடைபெறும் திருப்பணி வேலைகளை மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.கேஆர். பெரியகருப்பன் அவர்கள் தொடங்கி வைத்தார். சென்னை மண்டல இணை ஆணையர் திரு. த. சுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# கோடி லிங்கேசுவரர் வீற்றிருக்கும் கொட்டையூர்

தென்னகத்தில் பாய்ந்து வளம் சேர்க்கும் பொன்னி நதி எனப்படும் காவிரி ஆறு ஒரு சமயம் வலமாகச் சுழித்து ஓடி மறைந்து ஒரு பிலத்தில் புகுந்து விட்டது. அந்த பிலம் (பாதாள உலகத்திலிருந்த நாகேஸ்வரரை தரிசனம் செய்ய வருவதற்கு ஆதிசேஷன் ஏற்படுத்திக் கொண்ட வழியாகும். சோழநாட்டின் உயிர்நாடியாக விளங்கும் காவிரியாறு இப்படி பாதாளத்தில் மறைந்தது பற்றி அந்நாட்டை ஆண்டுவந்த அரித்துவசன் என்ற மன்னன் அறிந்து மிகவும் வருந்தினான்.

அப்போது ஓர் அசரீரி ''கொட்டையூரில் தவம் செய்து கொண்டிருந்த ஏரண்ட முனி என்னும் ஆத்திரேய மகரிஷியை வணங்கி, நிலைமையை எடுத்துக் கூறினால் இதற்கு வழிபிறக்கும்'' என்றது, மன்னனும் அவ்வாறே கொட்டையூர் சென்று ஏரண்ட முனிவரைச் சந்தித்தார். நிலைமையை விளக்கிக் கூறி மக்களின் குறையைத் தீர்த்து உதவுமாறு வேண்டினான். மக்களின் குறையைத் தீர்ப்பது தமது கடமையென்று எண்ணிய ஏரண்ட முனிவர், திருவலஞ்சுழி சென்றார். அங்கே பிலத்துள் குதித்து காவிரி மீண்டும் சோழ வளநாட்டில் பாய்வதற்கு வழிவகுத்தார். அன்று முதல் காவிரி



முன்போல் சோழநாட்டில் பாய்ந்து செழிப்பை ஏற்படுத்தி வருகிறது. என்பது புராண வரலாறு.

**கொட்டையூர்**

இத்தலத்திற்கு வில்வாரண்யம், ஏரண்டபுரம் என்ற இரண்டு பெயர்கள் உண்டு. எனினும், தேவாரப் பாடல்களிலும், மன்னர்களின் கல்வெட்டுகளிலும் கொட்டையூர் என்ற பெயரே குறிப்பிடப்பட்டுள்ளது. கொட்டையூரில் ஊர் முழுவதும் கொட்டைச் செடி எனப்படும் ஆமணக்குச் செடிகள் விளைந்து அடர்ந்த காடாக இருந்ததாகவும், அக்கொட்டைச் செடிகளின் நடுவில் இறைவன் தோன்றியதால், அவ்வூருக்குக் கொட்டையூர் எனப் பெயர் வந்ததாகவும் கூறப்படுகிறது.

கொட்டைச் செடிக்கு வடமொழியில் ஏரண்டம் என்பது பெயர். கொட்டைச் செடியின் கீழ் இருந்து தவம் செய்ததால், முனிவருக்கு ஏரண்ட முனிவர் எனப் பெயர் வந்ததாகக் கூறுவர். அத்திரி முனிவரின் மைந்தரான இவர், ஆத்திரேயர் என்ற பெயர் பெற்று விளங்கினார். இதே போல சோழ மன்னன் ஒருவனுக்கு ஓர் இரவில் கோடி லிங்கமாகக் காட்சி தந்ததால் இவ்விறைவனுக்குக் கோடீஸ்வரர் என்று பெயர் உண்டாயிற்று.

இமயமலை அடிவாரத்தில் பத்திரயோகி என்ற முனிவர் தவம் செய்து வந்தார். திரிகர்த்த தேசத்து இளவரசனான சத்தியாதி என்பவன் வேட்டையாடிக் களைத்து முனிவர் இருக்குமிடத்திற்கு வந்தான். அங்கே பார்வையற்ற முனிவர் ஒருவர் விழி திறந்த நிலையில் தவம் செய்து கொண்டிருந்தார். இதையறியாத இளவரசன் தன்னைப் பார்த்தும் தனக்கு மரியாதை தராமல் அவர் தன்னை அவமதித்ததாகக் கருதி, அந்த முனிவரை அவமதிக்க துணிந்தான். இறந்து கிடந்த ஓர் விலங்கின் உடலின் ஊனைச் சிதைத்து அந்தச் சிதைவுகளை முனிவர் முன் குவித்து வைத்துவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டான்.

தவம் கலைந்த முனிவர் நடந்ததை அறிந்து மிகுந்த கோபம் கொண்டார்

அரசகுமாரனைப் பிசாசாகும் படிச் சாபமிட்டார். அதன்படி இளவரசன் பிசாசாக உருமாறினான். அவனை சபித்ததால் முனிவரும் தன் தவ வலிமையை இழந்தார். மற்ற முனிவர்கள் கூறியபடி ஒரு கோடி தலம் சென்று தரிசித்து இழந்த வலிமையைப் பெற பயணமானார். பல தலங்களைத் தரிசித்து முடிவில் கோடித்தலமான கொட்டையூர் வந்து சேர்ந்தார். அப்போது அசரீரி ஒன்று, முனிவரே! நீங்கள் கோடித் தலம் சென்று வழிபட வேண்டாம். இந்தக் கொட்டையூரிலேயே யாம் கோடி லிங்கமாகக் காட்சி தருகிறோம். வழிபட்டு நலம் பெறுக! என்று கூறியது. அதன்படியே இங்கு வழிபட்ட முனிவர், சாபம் நீங்கிச் சிவஞானம் கைவரப் பெற்றார்.

இச்செய்தியறிந்த மன்னன், தன் மகனைக் கொட்டையூருக்கு அழைத்து வந்தான். வியாசமுனிவரின் மூலம் இத்தலத்தின் பெருமையை மேலும் அறிந்து கொண்டான். காவிரியிலும் கோடித் தீர்த்தத்திலும் மூழ்கி எழுந்து கோடீஸ்வரரையும், அன்னை பந்தாடும் நாயகியையும் தரிசித்தான். இதன் பயனால் பல காலம் நீடித்த அவனது பிசாசு வடிவம் நீங்கியது. மன்னனும் மைந்தனும் மகிழ்ச்சியடைந்தனர். இருவரும் இத்தலத்தில் நெடுநாள் தங்கியிருந்து திருக்கோயில் திருப்பணியைச் செய்து முடித்தனர். இதன்பின் தொடர்ந்து பூஜைகள் நடக்கவும் விழாக்கள் நடத்தவும் பல கட்டளைகளை ஏற்படுத்தினர்.

### தலச்சிறப்பு

இக்கோயிலில் சுயம்பு விநாயகராகக் காட்சிதருபவர் கோடி விநாயகர், இவரே தல விநாயகர் இறைவன் கோடி லிங்கங்களைத் தன் திருமேனியில் கொண்டு கோடீஸ்வரன் என்ற பெயருடன் சுயம்புநாதராகக் காட்சி தருகிறார். மேலும், இவருடைய திருமேனியில் கங்கையைத் தாங்கிய இடத்திலிருந்து கங்கை நீர் அரும்புவது மெய்சிலிர்க்க வைக்கும் காட்சியாகும்.

கும்பகோணத்திற்குக் கிழக்கே காவிரி பாய வழிவகை செய்த சமுதாயத் தொண்டரான ஏரண்ட முனிவரின் அழகிய திருவுருவம் இவ்வாலயத்தில் அமைந்துள்ளது.

திருநாவுக்கரசரும், அருணகிரிநாதரும் பாடியருளியதலம்.

அற்புதமான வேலைப்பாடுடன் வலது காலை முன் வைத்த கோலத்தில் அருள் வழங்கும் அஷ்டபுஜ (எட்டுக் கரங்கள்



கொண்ட) துர்க்கை அமைந்துள்ளாள்.

இங்கு கலை நுணுக்கத்துடன் காணப்படும் நவக்கிரகங்கள் சன்னதியில், ஒவ்வொரு கிரகமும் தங்களுக்கு உரிய வாகனங்கள் மற்றும் யந்திரங்களோடு காட்சிதருகின்றனர்.

இக்கோயிலுக்குப் பல்லவ மன்னர்களும் சோழ மன்னர்களும் திருப்பணி செய்துள்ளனர். அவர்கள் பொறித்த கல்வெட்டுக்களும் சுரங்கமும் அமைந்த திருக்கோயிலாக இத்தலம் திகழ்கிறது.

### கல்வெட்டுகள்

இவ்வாலயத்தில் படியெடுக்கப்பட்ட நான்கு கல்வெட்டுகளின் விவரக் குறிப்பினை இந்தியத் தொல்லியல் 1927ஆண்டு ஆய்வறிக்கையில் வெளியிட்டுள்ளது. இதன் மூலம் இரண்டாம் ராஜாதிராஜன் (கி.பி, 1169), மூன்றாம் குலோத்துங்கன் கி.பி.1205, கி.பி.1214 ஆகியோர் இந்த ஆலயத்திற்கு வழங்கிய கொடைகள், கட்டளைகள் பாண்டிய மன்னனை வெற்றிக் கொண்ட வரலாறு குறித்த செய்திகள் ஆகியவற்றை அறிகிறோம். இக்கல்வெட்டுகளின் மூலம் இறைவனின் பெயர் திருக்கோட்டீஸ்வரம் உடையார் என்பதை அறியமுடிகிறது. இவ்வூர் விக்கிரம சோழ வளநாட்டு இன்னம்பூர் நாட்டிலுள்ள கொட்டையூர் எனக் குறிக்கப்படுகிறது.



## இலக்கியங்கள்

இவ்வாலயம் தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்றாகத் திகழ்கிறது. காவிரியின் வடகரைத் தலங்களில் நாற்பத்து நான்காவது தலமாகும். திருநாவுக்கரசு சுவாமிகள் திருவலஞ்சுழி திருக்கொட்டையூர் என்ற இரண்டு தலங்களையும் இணைத்துத் திருத்தாண்டகம் பாடியுள்ளார்.

**''விண்டார் புரமூன் றெரித்தான் கண்டாய்**
**விலங்கலில் வல் லரக்கனுட லடர்த்தான் கண்டாய்**
**தண்டா மரையானு மாலுந் தேடத்**
**தழற்பிழம்பாய் நீண்ட கழலான் கண்டாய்**
**வண்டார்பூஞ் சோலைவலஞ் சுழியான் கண்டாய்**
**மாதேவன் கண்டாய் மறையோ டாறங்கம்**
**கொண்டாடு வேதியர்வாழ் கொட்டை யூரிற்**
**கோடீச் சுரத்துறையுங் கோமான் றானே.''**

இப்பாடலில் திருவலஞ்சுழியும் கொட்டையூரும் இணைந்திருப்பதைக் காண்கிறோம் இத்தலத்து முருகப் பெருமானை அருணகிரிநாதர்.

**''கொட்டமறப் புற்றரவச் செற்றமறச் சத்தமறக்**
**குற்றமறச் சுற்றுமறுப்- பலதோளின்**
**கொற்றமறப் பத்துமுடிக்கொத்து மறுத்திட்டதிறற்**
**கொற்றார்பணிக் கொட்டை நகர்ப் பெருமானே.''**

என்று போற்றியுள்ளார்.

கி.பி. 19ஆம் நூற்றாண்டில் முற்பகுதியில் வாழ்ந்த சிவக்கொழுந்து தேசிகர் என்பர் இத்தலத்தைப் பற்றி கோடீச்சுரக் கோவை, கொட்டையூர் உலா என்ற இரண்டு நூல்களை இயற்றியுள்ளார்.

## பாவம் தீர்க்கும் தலம்

''கொட்டையூரில் செய்த பாவம் கட்டையோடே'' என்ற பழமொழி இத்தலத்தின் சிறப்பை எடுத்தியம்புவதாக அமைகிறது, இப்பிறவியில் செய்த பாவப்பிணிகள் அனைத்தும் இவ்வூர் இறைவனை தரிசிக்கும் போது முழுவதுமாக விலகி விடும் என்பதும், இப்பிறவியில் செய்த புண்ணியங்கள் கோடி மடங்காகிப் பயன்தரும் என்பதும், இத்தலத்தின் ஐதீகமாகும். இத்தலத்தில் பஞ்சமூர்த்திகளை தரிசிப்பவர்க்கு நன்மை விளையும் என்பது அசைக்க முடியாத நம்பிக்கையாக உள்ளது. இத்தலத்தின் வரலாறு இதற்குச்சான்றாக அமைகிறது.

## ஆலய அமைப்பு

இவ்வாலயம் ஊரின் மையப் பகுதியில் கிழக்கு நோக்கியவாறு 60 அடி உயரமுள்ள ஐந்து நிலை இராஜகோபுரத்தைக் கொண்டு கம்பீரமாக அமைக்கப்பட்டுள்ளது. மனுநீதிச் சோழன் மகனை முறை செய்த வரலாற்றுச் சிற்பம் கோபுர நுழைவாயிலில் புடைப்புச்சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளது. இரண்டாம் கோபுர வாயில் 41 அடி உயரத்தில் மூன்று நிலைகளுடன் திருமாளிகைத் திருவாயிலாக அமைந்துள்ளது. அர்த்த மண்டபத்துள் திருவாணுக்கன் திருவாயில் அமைந்துள்ளது. சேக்கிழார் இயற்றிய திருத்தொண்டர் புராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று திருவாயில்கள் இக்கோயிலில் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

கோயிலின் முதற்பிரகாரத்தின் மையப் பகுதியில் கோடீசுவரர் வீற்றிருக்கும் கருவறை, அர்த்த மண்டபம், மகாமண்டபம் அமைந்துள்ளன. வடபகுதியில் பந்தாடும் நாயகி கோவில் அமைந்துள்ளது. மகாமண்டபத்தின் உள்ளே தென்புறம் மகா சாஸ்தா, நால்வர், ஏரண்ட முனிவர் ஆகியோர் திருவுருவங்கள் அமைந்துள்ளன. ஏரண்ட முனிவர் கலை நயத்துடன் பிரம்மாண்டமாய்க் காட்சி தருகிறார். இவரேகாவிரியைச் சோழ நாட்டில் மீண்டும் பாய உதவியவர். வடபகுதியில் நடராஜர், நவக்கிரகங்கள், பைரவர், சூரியர், சந்திரன் முதலிய திருவுருவங்கள் அமைந்துள்ளன. சோமாஸ் கந்தருக்குத் தனிச்சந்நிதி விமானத்துடன் உள்ளது.

உட்பிரகாரத்தில் பஞ்சலிங்கக் கோயிலும், கருவறை வெளிப்புறத்தில் விநாயகர், தட்சிணாமூர்த்தி, லிங்கோற்பவர், அஷ்டபுஜத் துர்க்கை

திருவுருவங்களும் அமைந்துள்ளன. கோடி விநாயகர், கோடி முருகன், மகாலட்சுமி சந்நிதிகள் உட்பிரகாரத்தின் மேற்கே அமைந்துள்ளன. சண்டேசுவரர் கோயிலின் அருகே ஆலயத் தீர்த்தமான அமுதக் கிணறு உள்ளது.

**கோடீசுவரர்**


பத்திரயோகி முனிவருக்குக் கொட்டையூரில் விநாயகர், அம்மையார், முருகர், சண்டேசுவரர்களோடு கோடி வடிவுடன் காட்சி தர அவர்களுடன் இறைவனும் திருவுருக் கொண்டு காட்சி தந்ததால், இத்தலத்து இறைவனுக்குக் கோடீசுவரர் எனப் பெயர் வழங்கலாயிற்று, இப்பெயர் சோழ மன்னன் கல்வெட்டுக்களில், கோடீசுவரம் உடையார் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

இறைவன் திருமேனி மீது பலாப்பழத்தில் காணப்படும் முட்கள் போல் திருமேனியெங்கும் லிங்கங்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு முள்ளும் ஒவ்வொரு சிவலிங்கம் என்பர்.

பத்திரயோகி முனிவர் கொட்டையூரில் தங்கி கோடீசுவரரை நாள்தோறும் வழிபட்டு வந்தார். ஒரு நாள் அவர் இறைவனை வழிபட்ட நிலையில், பச்சைக் கொடி போன்ற ஒரு பெண் பந்தாடிய வண்ணமாய் அங்கு வந்தாள். அப்பெண்ணின் தெய்வத் தன்மையைக் கண்ட முனிவர், மலையிறை மகளாகிய உமையம்மையோ என்ற நினைவில், அம்மையே நீயார் என்று கேட்க, நான் ராஜசேகரனின் மனைவி கௌரி என்று கூறி சிலைவடிவாய் அங்கேயே நின்றாள். இந்த வியத்தகு காட்சியைக் கண்ட முனிவர், பக்திப் பரவசத்தில் அம்மையைப் போற்றிப் புகழ்ந்தார். பந்தாடிய வண்ணம் இத்தலத்திற்கு வந்து சேர்ந்ததால், அன்னைக்குப் பந்தாடும் நாயகி என்ற பெயர் வழங்குகிறது. அன்னையின் வடிவம் வெகு நேர்த்தியாக அமைந்துள்ளது. **"பந்தாடு மெல்விரலாள் பாகன் கண்டாய்"** எனத் தேவாரம் குறிப்பிடுகிறது. அன்னைக்கு பந்தாடு நாயகி என்ற தமிழ்ப்பெயரை வடமொழிப்படுத்தி, கந்துககிரீடாம்பாள் என்று அழைக்கின்றனர். வடமொழிப்பெயரும் வழங்கப்படுகிறது.

**தலவிருட்சம் - தீர்த்தம்**

கொட்டைச் செடி எனப்படும் ஆமணக்குச் செடி இத்தலத்தின் தல விருட்சமாக விளங்குகிறது. காவிரி ஆறும் கோடித் தீர்த்தமும் (அமுதக் கிணறு) தீர்த்தங்களாக உள்ளன.



**தரிசன நேரம்**

காலை 6 மணி முதல் நண்பகல் 12 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரையிலும் ஆலயம் திறந்திருக்கும்.

**விழாக்கள்**

இவ்வாலயத்தில் தேய்பிறை அஷ்டமியில் பைரவர் வழிபாடு நடைபெறுகிறது. பங்குனி மாதத்தில் பெருந்திருவிழா பிரம்மோற்சவமாக 10 நாட்கள் நடைபெற்று வந்துள்ளது.

**அமைவிடம்**

இவ்வாலயம் தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் வட்டத்தில், சுவாமிமலை - கும்பகோணம் வழித்தடத்தில், கும்பகோணத்திலிருந்து மேற்கே 3 கி.மீ தொலைவில் காவிரியைத் தாண்டி அமைந்துள்ளது. அறுபடை வீடுகளில் ஒன்றான சுவாமி மலை, திருவலஞ்சுழி, திருப்புறம்பயம், இன்னம்பூர், பட்டீசுவரம், சக்திமுற்றம், பழையாறை ஆகிய சிவாலயத் தலங்களும், ஆதனூர், புள்ளம்பூதங்குடி, கபிஸ்தலம், ஆதனூர், ஆகிய வைணவத் தலங்களும் இவ்வூரைச் சுற்றி அமைந்துள்ளது.

செய்த பாவங்கள் பொடிப்பொடியாய் அழியவும் புண்ணியங்கள் கோடி கோடியாய்ப் பெருகவும், கொட்டையூர் கோடீசுவரனை வழிபடுவது நலம் பயக்கும் என்பதில் ஐயமில்லை.

- படைப்பு பனையபுரம் அதியமான்.



# உலகம் உய்ய உதித்த உடையவர்

பெ.ராமநாதபிள்ளை, செயல் அலுவலர், திருமூர்த்திமலை உடுமலை வட்டம்.

**சென்ற இதழ் தொடர்ச்சி...**

நம்பெருமாளுடைய தாமரைப்பூ போன்ற ஒளி பொருந்திய திருவடிகளை ஸ்ரீராமானுஜரின் தலையிலே அர்ச்சகர்கள் வைக்கவும், ஸ்ரீராமானுஜரும் மிகுந்த பக்தியோடு அத்திருவடிகளைத் தலையில் சுமந்து திருமேனியைத் தீண்டி, நம் பெருமாளைப் பணிவுடன் சேவித்து பெருமாளை நோக்கி ''ஆளவந்தாரது ஈசனே, பெரியநம்பியின் இதயமே, பந்தபாசங்கள் நிறைந்த இவ்வுலகில், பாம்பின் வாய் அகப்பட்ட தவளையைப் போல பதைத்து ஒடுங்கி நிற்கும் நீசனாகிய அடியேனை காக்க நிர்மலா சரணம்'' என மறுபடியும் வணங்கினார்.

**''ஆசறப் பூண்டு புல்ல அனுபவித் தாள வந்தார்**
**ஈசனே பெரிய நம்பி இதயமே அளவிலாத**
**பாசமாக் கடலுள் ஐவாய்ப் பாம்பினால் பதைப்புண்டு ஒய்ந்த**
**நீசனேன் தன்னைக் காத்த நின்மலா சரண மென்ன''**

ஸ்ரீராமானுஜ வைபவம் பாடல் 253.

இவ்வாறு தன்னை வணங்கி நின்ற ஸ்ரீராமானுஜரைப் பெருமாளும் அருள் நோக்குடன் பார்த்து, மிகப்பழமையான நான்கு வேதங்களிலே சிறந்து விளங்குபவரே ; நித்ய விபூதி (பரமபதம்) ஆகிய பரமபதத்தினையும், லீலா விபூதி ஆகிய இவ் மண்ணுலகத்தையும் ஏகதேசமாக உமக்கே தந்தோம். எதிராஜரே நீர் எம்மை காண்பதற்கு வெகு தூரம் நடந்து வந்தீர், ஆனால் நான் உம்மைக் காண்பதற்கு நான்கு அடிதான் வந்தோம். '' உலகம் உய்ய உதித்த உடையவரே'' என்று வாழ்த்தினார். உடையவரே என்று அன்புடன் அரங்கன் அழைத்தார். எனவே நீர் இந்த அழகிய ஸ்ரீரங்கத்தில் இருந்து, அழகிய திருவரங்கமான நம் வீட்டில் இருந்து எல்லா காரியங்களையும் கவனிப்பீராக என திருவாய் மலர்ந்தருளினார்.



பெருமாள் அருளியதைக் கேட்டு ஸ்ரீராமானுஜரும் ஸ்ரீரங்கத்திலே தன் அடியார்களோடு வாழ்ந்து கொண்டிருக்கும் பெரிய நம்பியின் முகத்தைப் பார்த்து ''தேவரீர் உமக்காகப் பேதையேன் ஆகிய அடியேனுக்கு கார்மேக வர்ணணாகியபெருமாள் எல்லாவற்றையும் எனக்கு காட்டினார்'' என்று பெரியநம்பியிடம் சொல்லவும் பெரியநம்பிகள் ஸ்ரீராமானுஜரிடம் பிற்காலத்தில் கலியும் கெட்டுப்போகும் கண்டு கொள்ளுங்கள் என்று நம்மாழ்வார் உம்மை குறித்தே அருளிச்செய்தார். ஆளவந்தாரும் நீரே நம்மாழ்வார் காட்டிய முதல்வன் என்று அருளிச்செய்தார். அடியார்கள் நல்வாழ்வு பெறும்படி நீரே சன்னியாசம் வாங்கிக் கொண்டு

இச்செல்வத்தை எல்லாம் பெற்றீர் உமக்கு அல்லாது வேறுயாருக்கு இத்தகைய பெருமை உண்டாகும் என மகிழ்ச்சியுடன் கூறினார்.

**''கண்டு கொள்மின் பின்னடையக்**
**கலியும் கெடுமென்றருள் மாறன்**
**பண்டு பகர்ந்தான் அப்படியே**
**ஆளவந்தார் பார்வையினால்**
**தொண்டர் உய்யும் படிநீயும் துறந்து**
**பெற்றாய் இச்செல்வம்**
**உண்டு கொல்லோ உனக்கல்லால்**
**ஒருவர்க்கென்ன உவப்போடும்''**
*ஸ்ரீராமானுஜ வைபவம் பாடல் 259.*

பெரிய நம்பியின் அன்பு நிறைந்த வார்த்தைகளைக் கேட்டு பின்னர் அடியார்களோடு திருமண்டபத்தை அடைந்து ஸ்ரீகாரியங்கள் எல்லாவற்றையும் ஆராயத்தொடங்கினார்.

கூரத்தாழ்வாரும் தன் மருமகனான முதலியாண்டானும் மற்ற சீடர்களும் நம்மாழ்வாரின் திருவருளும் உடனிருக்க ''பொன்னியம்மான்'' என்பவர் ஏற்படுத்திய ஆபரணப் பெட்டிகள் உள்ள கருவூலத்தையும் திறக்கச் செய்தார். ஆபரண பெட்டிகளை திறந்து அதில் உள்ள மாணிக்க கற்கள் பதித்த ஆபரணங்கள் மற்றும் முத்து, வைரம், நீலக்கல் கோமேதகம், பச்சைக்கல், வைடூரியம், பத்மநாகம் ஆகிய கற்கள் பதித்த நகைகள் எல்லாவற்றையும் நன்கு ஆராய்ந்து மீண்டும் பத்திரமாக பெட்டியிலே வைத்து மற்றும் பெருமாளின் வஸ்திரங்கள் பட்டாடைகள் எல்லாவற்றையும் பார்த்து மகிழ்ந்து அதன் பின்னர் அரிசி, மணிவிளக்கு, திருமாலை தொடுக்கக்கூடிய நந்தவனம் எல்லாவற்றையும் பார்த்து மற்றும் மடப்பள்ளி திருமதில்கள், கோபுரங்கள் பார்வையிட்டு, திருநந்தவனங்களில் செண்பகம், துளசி, மல்லிகை முதலிய மலர்கள் எல்லாம் பார்வையிட்டு இசைகலைஞர்கள், இசைவாத்தியங்கள் ஆகிய எல்லாவற்றையும் ஆராய்ந்து நீதி மார்க்கத்தில் செல்லக்கூடிய பக்தர்களை அந்தந்தத் துறையிலே நிறுத்தி நிர்வாகம் நடத்த ஏற்பாடு செய்தார்.

பின்னர் தன் சீடராகிய கூரத்தாழ்வாரை பார்த்து நீர் இங்கே உம் மனைவியாகிய ஆண்டாளைப் பிரிந்து இருப்பது தவறு எனவே நீர் உம்முடைய ஊரான கூரம் நகரம் சென்று ஆண்டாளை அழைத்து வருக என்றார். ஸ்ரீராமானுஜரின் கட்டளைப்படியே அவர் கூரம் சென்று ஆண்டாளைத் தவிர மற்ற எல்லாப் பொருட்களையும் அந்த நகரிலே விட்டுவிட்டு ஸ்ரீரங்கம் திரும்பினார். கூரத்தாழ்வாரோடு ஆண்டாள் வரும் பொழுது ஒரு தங்கத்தினால் ஆன தட்டத்தினையும் தன் மடியில் வைத்து எடுத்துக் கொண்டு வந்தாள். இரவு ஆனதும் கூரத்தாழ்வாரிடம் ஆண்டாள் மனம் கலங்கி ''வழியிலே திருடர் பயம் உண்டா'' எனக் கேட்கவும் ஏன் அவ்வாறு கேட்கிறாய் என்று கூரத்தாழ்வார் கேட்ட பொழுது தங்களுக்கு தாகம் எடுத்தால் தண்ணீர் கொண்டு வர தங்ககிண்ணம் ஒன்று வைத்துள்ளேன் என்றாள். கூரத்தாழ்வார் ஆண்டாளிடமிருந்த அந்த தங்க கிண்ணத்தை வாங்கிச் செடிகள் நிறைந்த மேட்டுப்பகுதியில் வீசி எறிந்துவிட்டு தன் மனைவியை நோக்கி இப்பொழுதும் நடுங்கும் படியான பயம் உண்டோ என்று கேட்கவும் அவரது மனைவியாள் ''பயமெல்லாம் மடியில் இருந்த பாத்திரத்தோடு போய்விட்டது'' என்று பணிவுடன் பதிலளித்தாள். பின்னர் இருவரும் ஸ்ரீரங்கம் அடைந்து பெருமை மிகுந்த ஸ்ரீராமானுஜரைத் தன்மனைவியோடு வணங்கி எழுந்தார். தன்னை வணங்கிய கூரத்தாழ்வாரையும் அவரது மனைவியையும் திருவரங்க பெருமானுக்குச் சேவை செய்யும்படி அருள்புரிந்து கூரத்தாழ்வரோடு முதலியாண்டரோடு மற்ற அடியார்களோடும் ஸ்ரீரங்கத்திலே பெருமாளுக்கு தொண்டு செய்து வாழ்ந்து வந்தார்.

ஒரு நாள் தன் குருவாகிய பெரியநம்பியிடம் ''தேவரீர் அடியேனுக்கு தாங்கள் சிறந்த கருத்துக்களை எல்லாம் உபதேசம் செய்தீர்கள் இன்னும் சிறப்பு மிக்க கருத்துகளை எடுத்து சொல்லவும் என்று கூறவும் பெரிய நம்பி ஸ்ரீராமானுஜரை நோக்கி ''ஆச்சார்யனாகிய ஆளவந்தாரிடம் நான் கேட்டதை எல்லாம் உமக்கு சொன்னேன்'' நான் அவ்வாறு உபதேசம் பெறும் காலங்களில் திருக்கோட்டியூர் நம்பி ஒரு ரகசியத்தை ஆச்சார்யார் ஆளவந்தாரிடம் இருந்து பெற்றுக் கொண்டார். நீர் திருக்கோட்டியூர் நம்பியிடம் சென்று அந்த ரகசியத்தை தெரிந்து கொள் என்றார். ஸ்ரீராமானுஜரும் மிகுந்த மகிழ்வோடு தன் குருநாதனாகிய பெரிய நம்பியை மூன்று முறை வலம் வந்து வணங்கி திருக்கோட்டியூர் செல்வதற்கு ஆயத்தம் ஆனார்.

பின்னர் தன் சீடர்களோடு ஸ்ரீரங்கத்தை விட்டு புறப்பட்டு அடியார்களும் பாகவதர்களும் புடை சூழ திருக்கோட்டியூர் சென்றார். திருக்கோட்டியூர் அடைந்ததும். திருக்கோட்டியூர் பெருமாளை வணங்கி பின்னர் திருக்கோட்டியூர் நம்பியிடம் வந்து

அவருடைய திருவடியை வணங்கி அவர் பக்கத்தில் நின்றார். பெருமை மிக்க ஸ்ரீராமானுஜர் இவ்வாறு நிற்கவும் அவரை கண்டும் காணாதது போல் ஸ்ரீராமானுஜருடைய முகத்தை ஏர்எடுத்தும் பார்க்காதது போல் இருந்தார் திருக்கோட்டியூர்நம்பி.

**''சீரியர் இவணம் நிற்பத் திருக்கோட்டி நம்பி என்னும்**
**தாரியல் மார்பர் நின்ற தலைவர்தம் முகத்தை நோக்கர்**
**ஆரிவர் என்னார் எவ்வூர் அமர்வது நம்பால் வந்த**
**காரியம் என் கொல் என்னார் கண்டுகண் கண்டிலார் போல்''**

ஸ்ரீராமானுஜ வைபவம் பாடல் 288.

அதன் பின்னர் திருக்கோட்டியூர் நம்பி தன் திருமாளிகைக்கு சென்று விட்டார். ஸ்ரீராமானுஜரும் மிகவும் மனம் வருந்தி நம்பி தன்னை ஏன் எதற்கு வந்தாய் என்று கேட்கவில்லை என்று மனம் வருந்தினார். மறுநாள் காலை ஸ்ரீராமானுஜர் திருக்கோட்டிநம்பி சன்னதிக்குச் சென்று அவரை வணங்கி அடியேனுக்கு மனம் இறங்கி அருளவேண்டும் என்று வேண்டினார். ஆனால் திருக்கோட்டியூர் நம்பி, ஸ்ரீராமானுஜரை கொஞ்சமும் மதிக்காமல் வா என்றோ, போ என்றோ எதுவும் சொல்லாமல் இறைவனின் புகழை எல்லாம் சொல்லிவிட்டு தன் மாளிகைக்குச் சென்று விட்டார். ஸ்ரீராமானுஜரும் மிகவும் மனம் வருந்தி இன்னொரு நாள் பார்த்துக் கொள்ளலாம் என்று சொல்லி ஸ்ரீரங்கம் வந்தார்.

மறுபடியும் திருக்கோட்டியூர் நம்பியிடம் அந்த ரகசியத்தை தெரிந்து கொள்வதற்காக ஸ்ரீரங்கத்தில் இருந்து புறப்பட்டு திருக்கோட்டியூர் சென்றடைந்தார். திருக்கோட்டி நம்பியை வணங்கி எழவும் ''திருக்கோட்டி நம்பி ராமானுஜரை நோக்கி இவ்விடத்திற்கு பலமுறை வந்து போவது எதற்காக'' என்று கேட்கவும் ராமானுஜர் ''பரமனே முற்காலத்தில் அர்ச்சுனனுக்கு உபதேசித்த கீதா சரம சுலோகத்தை'' நான் அறிய வேண்டும் என்று சொல்லவும் அது இப்போதைக்கு முடியாது நீ ஸ்ரீரங்கம் சென்று விட்டு இன்னொரு முறை இங்கு வா என்று சொல்லி அனுப்பினார்.

ஒரு முறை ஸ்ரீரங்கநாதரின் திருவிழாவைக் காண்பதற்காக திருக்கோட்டியூர் நம்பி ஸ்ரீரங்கம் வந்திருந்தார். அப்பொழுது ஸ்ரீராமானுஜர் அவருடைய திருவடிகளை வணங்கினார். திருக்கோட்டியூர் நம்பியும், ராமானுஜரும் பெருமாளின் சன்னதியில் நின்றார்கள். அப்பொழுது ஸ்ரீரங்கநாதர் திருக்கோட்டியூர் நம்பியுடம் வேதாந்தத்தின் முடிந்த பொருளாக உள்ள அந்த சரம ஸ்லோகத்தின் பொருளை ஸ்ரீராமானுஜருக்கு அருள்வீராக என்று சொல்லவும் திருக்கோட்டியூர் நம்பி ரங்கநாதரிடம் தேவரீர் அடியேனின் சிறுமையை ஆராயும் பொழுது அந்த கீதா சரம ஸ்லோகத்தை சொல்வதற்கு எனக்கு தகுதியில்லையே என்று சொல்லவும், உடனே ரங்கநாதர் உம்முடைய வாக்கின் மூலமாக நானே அதை உபதேசிப்பேன். ஆதலால் நீர் எனது வாக்கு என்று நினைத்து அதை நீ ராமானுஜருக்கு உபதேசிக்க வேண்டும் என்று கூறினார். பின்னர் திருவிழா முடிந்ததும் திருக்கோட்டியூருக்கு புறப்பட்டு சென்றார் திருக்கோட்டியூர் நம்பிகள். சில நாள் கழித்து ராமானுஜர் திருக்கோட்டியூர் நம்பிகள் பொருட்டு ஸ்ரீரங்கத்தில் இருந்து திருக்கோட்டியூர் புறப்பட்டு சென்றார். திருக்கோட்டியூர் வந்து அடைந்ததும் திருக்கோட்டியூர் நம்பிகளை வணங்கி நிற்கவும் திருக்கோட்டி நம்பி ராமானுஜரை நோக்கி இவ்விடத்தில் இருப்பீராக என அருளிச்செய்ய ராமானுஜரும் ஆறு மாதம் திருக்கோட்டியூரிலேயே தங்கி இருந்தார்..

ஒரு நாள் உஞ்சவிருந்தி (பிச்சை) எடுப்பதற்காக ராமானுஜர் ஆண்டாள் அருளிச் செய்த திருப்பாவையை பாடிக்கொண்டு திருக்கோட்டியூர் நம்பியின் வீட்டுப்பக்கம் வந்து சேர்ந்தார். அப்பொழுது திருப்பாவையில் உள்ள '' உந்து மத களிறு'' என்ற பாடலை பாடிக்கொண்டு

**''பந்தார் விரலிஉன் மைத்துன்ன் பேர்பாடச்**
**செந்தா மரைக்கையால் சீரார் வளையொலிப்ப**
**வந்தா ரணங்கே திறஎன்ன வாசலின் முன்**
**எம்தாதை நின்றாரவ் எல்லையினில் நம்பிதரும்''**

*ஸ்ரீராமானுஜ வைபவம் பாடல் 310*

என்று பாடி நிற்கவும் திருக்கோட்டியூர் நம்பியின் மகளாகிய தேவகி என்ற பெண் கதவைத் திறக்கவும் தேவகியை பார்த்த ராமானுஜர் அந்த ''உந்து மத களிறு'' பாடலில் வரக்கூடிய நப்பின்னைப் பிராட்டியே இப்பெண் என நினைத்து அந்த பேரின்ப வெள்ளத்தில் நடுங்கி ஒடுங்கி பூமியில் விழுந்தார். இதை பார்த்த

திருக்கோட்டி நம்பியின் மகளாகிய தேவகி இவரும் ராவணனைப்போல் போலி சன்னியாசியாக இருப்பார் போலும் என்று சொல்லவும் திருக்கோட்டியூர் நம்பி ராமானுஜரின் அருகில் வந்து ''இளையாழ்வாரே நீர் இன்று நம் இல்லத்தினை அடையும் பொழுது பாடிய பாடல் உந்து மத களிறு'' பாடலோ என்று வினவ ராமானுஜரும் ஆம் என்று சொன்னார்.

மறுபடியும் ஒருநாள் ராமானுஜர் திருக்கோட்டி நம்பியை பார்க்க சென்ற பொழுது திருக்கோட்டியூர் நம்பிகள் திருமாளிகையின் மேலே உள்ள ஒரு மச்சில் ஏணி அமைத்து ஏறி சமாதி நிலையில் இருந்தார். திருக்கோட்டி நம்பியிடம் ''உத்தமருக்கெல்லாம் உத்தமரே இந்த தியானமென்ன என்று வினவினார்'' அதற்கு அவர் நான் ஆளவந்தாரை தியானம் பண்ணிக் கொண்டிருக்கிறேன் என்றார். மேலும் ராமானுஜர் திருக்கோட்டி நம்பியிடம் நீர் ஜெபிக்கும் மந்திரம் என்ன என்று வினவினார். அதற்கு அவர் ஆளவந்தாரின் திருப்பெயர் கொண்ட ஆறு எழுத்து உடைய ''யமுனை(த்) துறைவன்'' என்றார். இதைக்கேட்ட ராமானுஜர் ஆளவந்தாரின் பெருமைகளை இரவும், பகலும் நினைத்து திருக்கோட்டி நம்பியின் அன்புக்கு நான் பாத்திரமாவேனா என்று வருந்தி ஏங்கினார்.

**''மன்னினார் பலநாள் அவ்வணம் மன்னி**
**வருந்தினம் பல செல நம்பி**
**என்னுமா மறையோன் அருள் பெறாமையினால் எரியுறு**
**மெழுகெனக் கரைந்து**
**மின்னுமா மௌலி விண்டுவின் திருமுன்**
**ஒரு பகல் வேதனையோடு**
**முன்னுமாய்ப் பின்னும் ஆயினார் இருந்தார் இருந்துழிமுதல்வன் ஆர்**
**அருளால்**

*ஸ்ரீராமானுஜ வைபவம் பாடம் 322.*

தொடரும்



சென்னை, மயிலாப்பூர், அருள்மிகு மாதவப் பெருமாள் திருக்கோயிலில் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டுள்ள வசந்த மண்டபத்தினை மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் 17.11.2008 அன்று திறந்து வைத்து சிறப்பித்தார்.

# அந்தரங்க பக்தி

''அருள்மொழி அரசு''
**திருமுருக. கிருபானந்த வாரியார் சுவாமிகள்.**

ஞானானந்த யதீந்திரர் என்ற ஒருமகான் விநாயக பக்தியில் சிறந்து விளங்கினார். அவர் விநாயகப் பெருமானுடைய திருவுருவத்தை வைத்து, முறைப்படி அபிஷேக ஆராதனைகள் செய்து வழிபடுவார். அந்த மகான் நகரங்களுக்கும் செல்லுவார். வசதியில்லாத கிராமப் புறங்களாகிய பட்டி தொட்டிகளுக்கும் செல்வார். ஆங்காங்குள்ள ஜனங்களை அழைத்து, அவர்களுக்கு விநாயக மந்திரத்தை உபதேசித்து, விநாயகப் பெருமானை உபாசிக்குமாறு செய்து, பக்தி நெறியைப் பரப்பிவந்தார்.

அவருடைய விரிவான பூசையில் பலரும் கலந்து கொண்டு மெய்மறந்து நிற்பார்கள். அம்மகான் தமக்கு வரும் காணிக்கைகளை நல்ல இனிய பிரசாதங்கள் செய்வித்துச் சேவார்த்திகளுக்கு வழங்குவார். அவர் ஒவ்வோர் ஊரிலும் நான்கைந்து நாட்கள் தங்கியிருப்பார்.

மாலை நேரங்களில் சனங்களுக்கு விநாயகருடைய பெருமைகளை எடுத்து விரிவுரைபுரிவார். அவருடைய வார்த்தைகள் மதுரம் கனிந்து மிக்க இனிமையாக இருக்கும். அதனால், மக்களுக்குப் பக்திப்பரவசம் உண்டாகும். அன்பால் அணுகிவரும் அடியார்களுக்குச் சிறிய அளவில் செய்த செப்பு விநாயகர், சந்தனமர விநாயகர், எருக்கம் வேர் விநாயகர் ஆகியவற்றைக் கொடுத்து, தீட்சையும் தந்து விநாயகரை உபாசிக்குமாறு அறிவுரை கூறுவார்.

ஒரு சமயம் யதீந்திரர் தத்தனூர் என்ற கிராமத்துக்கு எழுந்தருளினார். அந்த ஊரிலுள்ள மக்கள் திரண்டுவந்து மகானை வணங்கினார்கள். அவர் வழக்கம்போல் பலருக்கும் விநாயகர் திருவுருவைத் தந்து உபதேசித்தார். அந்த ஊரின் அக்கிரகாரத்தில் ஓர் ஏழைப் பிராமணர் இருந்தார். கும்பகர்ண்ணன் இறக்கும் போது தனக்கே சொந்தமான தூக்கத்தை அந்த அந்தணர்க்கு உயில் எழுதி வைத்துவிட்டுப் போய்விட்டான். அதனால் தூக்கத்தில் ஊக்கத்துடன் உறங்கிக் கொண்டேயிருப்பார். பகல் ஒரு மணிக்குத் தூக்கத்தைவிட்டு எழுந்திருப்பார். சாப்பிட்டுவிட்டு கை ஈரம் உலர்வதற்குள் மறுபடி படுத்துக் கொள்வார், தூக்கமே ஆக்கமெனநீக்கமற இருந்தார்.

அவருடைய மனைவியார் அருந்ததிக்குச் சமானமானவள். கணவனைக் கடவுளாகக் கருதி வந்தாள். தனவந்தர்கள் வீட்டுக்குப் போய்க் குற்றேவல் செய்து அதனால் வரும் ஊதியத்தைக் கொண்டு கணவனைக் காப்பாற்றிவந்தாள். அந்த உத்தமிக்கு நம் கணவர் இப்படி உறங்கியவண்ணம் இருக்கின்றாரே, ஊரில் உள்ளவர்கள் ஞானானந்த யதீந்திரரிடம் சென்று, உபதேசம் பெற்று விநாயகர் பூசைசெய்கிறார்களே. அதுபோல் நம் கணவரும் பிள்ளையாரை வாங்கிவந்து வழிபாடு செய்யவில்லையே பெண்ணாகப் பிறந்த நான் என்ன செய்ய முடியும்?- என்று எண்ணி ஏங்கினாள்.

ஒரு நாள் கணவனாரை மெதுவாக எழுப்பிக் குளிப்பாட்டி, தோய்த்து உலர்ந்த ஆடையை உடுக்கச் செய்து, பணிந்து நின்று தணிந்த குரலில் கூறினாள். ''அன்புள்ள ஆர்வலீர் நம் ஊருக்கு ஞானானந்த யதீந்திரர் என்ற ஒரு மகான் எழுந்தருளியிருக்கிறார். அவரிடம் பலரும் சென்று உபதேசம் பெற்று, சிறுசிறு விநாயகர் திருவுருவங்களைப் பெற்று வந்து நேசித்துப் பூசிக்கிறார்கள். தாங்களும் சென்று ஒரு பிள்ளையாரை வாங்கிக் கொண்டு வாரும்'' என்றாள்.

''ஏண்டி பிள்ளையாரை வாங்கி வந்தால் தினம் குளிக்க வேண்டுமே''

''நீங்கள் என்று குளிப்பீரோ அன்று பூசைசெய்யுங்கள், மற்ற நாளில் நான் பூசைசெய்கிறேன்.''

''பிள்ளையாரை வாங்கிவந்தால்

அவருக்குத் தேங்காய், பழம், சுண்டல், பொரி கடலை ஆகியவற்றுக்கு நாம் எங்கேபோவது?''

''நாம் உண்ணுகிற பழம் கஞ்சியைப் பிள்ளையாருக்குப் படைத்தால் போதும். பிள்ளையாருக்கு அன்புதான் முக்கியம். ஆகாரம் முக்கியம் அல்ல''

இதனைக் கேட்ட அந்த முரட்டு மனிதர் ராமபாணம் புறப்பட்டதுபோல நேரே யதீந்திரர் தங்கியிருந்த திருமடத்துக்குச் சென்றார். மாணவர் குழாங்களுக்கு இடையே முழுநிலவைப் போல் அமர்ந்திருந்த ஆசிரியரைக் கண்டார். அவரை வணங்கிக் கேட்க வேண்டும் என்ற நியதி அறியாத அவர் ''குருவே, ஒரு பிள்ளையார் கொடு'' என்று உரத்த குரலில் கேட்டார்.

குருநாதர் புன்னகை பூத்து, அந்த முரட்டு மனிதரை அடிமுதல் முடிவரை பார்த்தார். அருகிலிருந்தவரை ''இவர் யார்? என்று கேட்டார். அவர்கள் சுவாமிஜி இவர் இந்த ஊர் அக்கிரகாரத்தில் இருக்கிறார். இவர் பெயர் கணேசஐயர். முரட்டுத் தன்மை உள்ளவர். ஆனால் நல்லவர் என்று கூறினார்கள்.

குருநாதர் ''ஐயா நாளைக்கு வாரும் பிள்ளையார் தருவேன்'' என்று கூறினார், உடனே அவர் வீட்டுக்குப் போய்'' பெண்ணே நாளைக்குப் பிள்ளையார் தருகிறேனென்று குருநாதர் கூறினார்'' என்று சொல்லிவிட்டு நித்திராதேவியை உபாசிக்கத் தொடங்கினார்.

மறுநாள் அந்த அம்மாள் பகீரதப் பிரயத்தனம் செய்து கணவனை எழுப்பிக் குருநாதரிடம் அனுப்பினார். அவர் ''குருவை ஒரு பிள்ளையார் கொடு'' என்றார். குருநாதர் ''நாளைக்கு வாரும்'' என்றார். இப்படி அந்த மனிதர் முப்பதுநாள் அலைந்தார். முப்பத்தோராவது நாள் அவருக்கு அசாத்தியகோபம் வந்துவிட்டது. குருவே பிள்ளையாரை நீர் கொடுக்கிறீரா அல்லது நான் உங்களுக்குக் கொடுக்கட்டுமா? என்று கோபத்துடன் கேட்டார்.

குருநாதர் சிரித்துக் கொண்டே ''ஐயா இந்த மடத்துக்குப் பின்னால் அரசமரத்தின் கீழ் நாலடி உயரமுள்ள பிள்ளையார் ஒன்று இருக்கிறது, அதை எடுத்துப்போம்'' என்று கூறினார். அதைக்கேட்ட ஐயர் அளவற்ற மகிழ்ச்சி அடைந்தார்.

''குருவே எல்லோருக்கும் அரை அங்குலம், ஓரங்குலம் அளவுள்ள பிள்ளையாரைக் கொடுத்தீர்கள். எனக்கு மட்டும் பெரிய பிள்ளையாரைக் கொடுத்தீர்கள். உங்களுக்குக் கோடி வணக்கம்'' என்று கூறிவிட்டு அரசமரத்தின் கீழ்ப் போற்றுவாரின்றிக் கிடந்த பிள்ளையாரிடம் போனார். அவரைத் தழுவிக் கொண்டு அழுதார். கண்ணப்பநாயனார் காளத்தியப்பரைக் கண்டதுபோல் உள்ளம் உருகினார்.

மேல் அங்கவஸ்திரத்தை எடுத்துச் சும்மாட்டுத்தலையில் வைத்துக் கொண்டார். அங்கிருந்த மடத்துச் சாமிகளைப் பார்த்து, 'ஐயா பிள்ளையாரை எடுத்து என் தலைமீது வையுங்கள்' என்றார். அந்த மடத்துச் சாமியார் ''இந்த ஐயர் தலை உடைந்து சாகட்டும்'' எண்ணிப் பத்துப்பேராகச் சேர்ந்து பிள்ளையாரைத் தூக்கி அவர் தலைமேல் வைத்தார்கள்.

அன்பு வடிவாகிய ஐயர், ''என்னைக் காக்கவந்த கருணைக்கடலே கணேசமூர்த்தியே என்று கூறித் தலைமீது பிள்ளையாரை வைத்துக் கொண்டார். விநாயகர்



அவர் தலைமீது வைத்தவுடன் சடைபோலப் பாரமில்லாமல் ஆகிவிட்டார். அந்தணர் ''அப்பனே ஐந்து கரத்து அண்ணலே நீர் எப்பொழுது சாப்பிட்டீரோ உமக்கு வயிறு சுரைக்குடுக்கைபோல் காலியாக இருக்கின்றது போலும் அதனால் பாரமே இல்லை. இன்று பிச்சைஎடுத்து உமக்கு உணவு தந்து காப்பாற்றுவேன். நாளை முதல் என்னை நீர் காப்பாற்றவேண்டும்'' என்று கூறி, ஆனந்த தாண்டவமாடிக் கொண்டு தமது குடிசைக்குச்சென்றார்.

''பெண்ணே நல்லகுருநாதர். நம்முடைய வறுமையை ஒழிக்க வளர்ந்த பிள்ளையாரை வழங்கினார். ஒரு பலகை போடு'' என்றார். அவள் ஒரு பலகையை எடுத்து இட்டாள். வீட்டைப் பசுவின் சாணத்தால் மெழுகினாள். கோலம் போட்டாள். அறுகு, வெள்ளெருக்கு, வில்வம் முதலிய பத்திர புஷ்பங்களைக் குடலையில் எடுத்தாள்.

ஐயர் ஊருக்குள் சென்று '' இன்று எங்களுக்கு இந்தத் தள்ளாத வயதில் ஒரு பெரிய பிள்ளை பிறந்திருக்கிறது. அரிசி போடுங்கள்'' என்று வீடுதோறும் பிட்சைஎடுத்துக் கொண்டு வந்தார். முக்கால்படி அரிசி சேர்ந்தது. அதை மனைவி கையில் கொடுத்தார். அந்தப் புண்ணியவதி முக்கால் படி அரிசியையும் சமைத்து, தோட்டத்திலுள்ள கீரையைப் பறித்துக் கடைந்து வைத்தாள். ஒரு சிறிது மோர் வாங்கி, வைத்தாள்.

அந்தணர் ஐந்துகரத்து அண்ணலுக்குஅபிஷேகம் செய்யப் பாலும், தேனும் பஞ்சாமிர்தமும் இல்லையே என்று ஏங்கினார். கிணற்றிலுள்ள நீரை முகந்து, தண்ணீரும் கண்ணீரும் விட்டு, விநாயகமூர்த்திக்கு அபிஷேகம் செய்தார். பத்திரபுஷ்பம் சாத்தினார். வலம்வந்து தலையில் குட்டிக்கொண்டு, தோப்புக்கரணம் போட்டு வழிபாடு செய்தார். பிள்ளையாரின் திருமுன் மூன்று வாழை இலை இட்டு, ஒவ்வோர் இலையிலும் கால்படி அன்னத்தை இட்டுக் கடைந்த கீரையை வைத்து, மோர்க் கிண்ணத்தையும் அருகில் வைத்தார்.

''விநாயகமூர்த்தி நான் பரம ஏழை. எள்ளுருண்டை, கடலை, பொரி, தேங்காய், பழம் முதலியவற்றை உனக்குப் படைக்கத் தகுதி இல்லாதவனாக இருக்கிறேன். இந்த மூன்று இலைகளிலுள்ள அன்னமும் உனக்கு என்று எண்ணிக் கொள்ள வேண்டாம். நடு இலையில் உள்ள அன்னம் உனக்கு. ஓர் இலை அன்னம் எனக்கு. மற்றோர் இலையில் உள்ள அன்னம் உன் அன்னையாகிய இவளுக்கு உரியது. அருட் கடலே இந்த ஏழையின் அன்னத்தைக் கருணையுடன் ஏற்றுக் கொண்டு உண்ணுக, என வேண்டிக் கொண்டார். அவர் பிள்ளையார் அமுது செய்வார் என்ற நம்பிக்கையில் பிள்ளை யாரைப் பணிந்து பலமுறை வேண்டினார். பிள்ளையார் முன் அமர்ந்து கணவனும் மனைவியும்.

*''ஜய கணேச ஜய கணேச ஜய கணேசபாகிமாம்,*

*ஜய கணேச ஜய கணேச ஜய கணேச ரக்ஷிமாம்''*

என்று நெடுநேரம் பஜனை செய்தார்கள். ஐயர் கண்களை மூடித் தியானம் செய்தார். பிள்ளையார் அமுது செய்யவில்லை. அந்தணர் அழுதார், பலமுறைதொழுதார்.

''பெண்ணே பிள்ளையாருக்கு நம்மீது வருத்தம்போலும். இந்தக் கிழவனுக்கும் கிழவிக்கும் இரண்டு இலை அன்னம். நமக்கு மட்டும் ஓர் இலை அன்னமா? என்று குழந்தை எண்ணுகிறான். ஓர் இலை அன்னத்தை நடு இலையில் கொட்டிவிடுகிறேன். மற்றோர்இலை அன்னத்தை நாம் இருவரும் பகிர்ந்து உண்ணலாம். இது உனக்கு உடன்பாடா? என்று கேட்டார்.

அந்த அம்மாள் அப்படியே செய்து விடுங்கள் என்றார். ஓர் இலை அன்னத்தை எடுத்து நடுஇலையில் கொட்டிவிட்டார். ''பிள்ளையாரப்பா, உனக்கு இரண்டு இலை அன்னத்தைப் படைத்திருக்கிறேன். உனக்குப் பசி எடுக்கவில்லையா? களைப்பாக இருக்கிறதா? அன்னத்தைப் பிசைந்து உனக்கு ஊட்டட்டுமா? தயவு செய்து தாமதிக்காமல் சாப்பிடு என்று வேண்டிக் கொண்டார். பிள்ளையார் சாப்பிடவில்லை.

''பெண்ணே நாம் இத்தனை நாள் அரசமரத்தின் கீழே பட்டினி கிடந்தோமே இந்தக் கிழவனும், கிழவியும் ஒரு நாள் பட்டினி இருக்கக் கூடாதா? என்று நம் மகன் கருதுகிறான். இன்று நாம் உபவாசம் இருப்போம். இந்த இலை அன்னத்தையும் நடு இலையில் படைத்து விடுவோம் என்றார். அதுதான் நல்லது என்று அவள் கூறினாள். மற்ற இலையின் அன்னத்தையும் நடு இலையில் கொட்டிவிட்டார்.

மூத்த பிள்ளையாரே முக்கால்படி சோறு படைத்திருக்கிறேன். நீஅடம் பிடிக்காதே. அமுது செய்து எங்களுக்கு

அருள் செய் என்று பலமுறை வேண்டினார். பிள்ளையார் சாப்பிடவில்லை. பெண்ணே. இன்னும் உள்ளே சோறு இருக்கிறதோ என்று மகன் சந்தேகப்படுகிறான். சோற்று பானையைக் கொண்டுவந்து மகனிடம் காட்டு என்றார். அந்த உத்தமி சோற்றுப் பானையைக் கொண்டுவந்து மகனிடம் காட்டினாள். பிள்ளையாரப்பா பானையைப் பாரப்பா. உன் பாத சாட்சியாக ஒரு பருக்கையும் கிடையாது. இந்த ஏழைகளை அலட்சியம் செய்யாதே. நாங்கள் உன் அடிமைகள். அமுது செய்தருள் என்று இன்னுரை கூறி வேண்டினர். பிள்ளையார் அமுது செய்தாரில்லை.

அந்தணருக்குச் சீற்றம் பொங்கி எழுந்தது. பெண்ணே மாலை மணி ஆறு ஆச்சு. இன்னும் என்ன ஆராய்ச்சி? உலக்கையைக் கொண்டுவா. இவன் தொப்பை கிழிய இடிக்கிறேன் என்றார். அவள் உலக்கையைக் கொண்டு வந்து கொடுத்தாள். தம்மீது நம்பிக்கை வைத்த அந்தணருக்கு இரங்கி, ஆனைமுகத்து அண்ணலார் இலையில் தும்பிக்கையை வைத்தார். அன்னம் மறைந்துவிட்டது. பிள்ளையார் அமுது செய்தார் என்ற ஆனந்தத்தில் அந்தச் சதிபதிகள் நிதி பெற்றாற்போல் துதிசெய்து மகிழ்ந்தார்கள். அவர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. பிள்ளையாரை வணங்கிவிட்டு ஒருபுறம் படுத்தார்கள்.

ஐயருக்குப் பசியின் கொடுமையால் உறக்கம் வரவில்லை. பெண்ணே பிள்ளையார் வேண்டாம் என்று சொன்னேனே, கேட்டாயா? பிள்ளையார் முக்கால்படி சோறுதின்றார். உனக்கு அரைக்கால்படி, எனக்கு அரைக்கால்படியாகத் தினம் ஒருபடி அரிசிக்கு நான் எங்கே போவேன்? என்று கூறி வருந்தினார்.

அவள் ''நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்? கருணைக் கடலாகிய கணபதி நம்மைக் காப்பாற்றுவார்'' என்று ஆறுதல் கூறினாள். இருவரும் விநாயருடைய திருவடியைச் சிந்தித்துக் கொண்டே உறங்கிவிட்டனர். கணேசப் பெருமான் ''குசேல முனிவர் கொடுத்த ஒரு பிடி அவலுக்குக் கண்ணபிரான் அஷ்டலட்சுமியையும் அள்ளிக் கொடுத்தாரே முக்கால்படி சோறு கொடுத்த முதிய அந்தணனுக்கு நாம் அருள்புரிய வேண்டும்'' என்று திருவுளம் பற்றினார்.

அந்தக் குடிசைஏழடுக்கு மாடியாக ஆயிற்று. அம்மாளிகையில் அரிசி மூட்டைகளும் பருப்பு மூட்டைகளும், பாத்திரங்களும், பண்டங்களும் பட்டாடைகளும் நிறைந்து காட்சியளித்தன. அதிகாலையில் அந்தணர் எழுந்தார். மனைவி மூவாயிரம் ரூபாய் பெறுமான உயர்ந்த பட்டாடையுடனும், வயிர அணிகளுடனும், காட்சி அளிக்கக் கண்டார். அதிசயம் கொண்டார். சிறிது நேரம் கண்களையே நம்பாமல் விழித்தார். அப்பனுடைய அருளை நினைந்து உருகினார்.

''மாதரசே மகா கணபதியின் கருணையை என்னவென்று சொல்வது. குசேலனாக இருந்த என்னைக் குபேரனாகச் செய்துவிட்டார்'' என்று கூறிக் கூத்தாடினார். அந்த அம்மையார் பிள்ளையார் இத்தனை செல்வத்தையும் நமக்குத் தந்தார். ஆனால் பிள்ளையாரைத் தந்தவர் குருநாதர் தாமே? அவரை அழைத்துவந்து காணிக்கை கொடுங்கள்'' என்று வேண்டினாள். வேதியர் மடத்தை நாடி ஓடினார். அங்கிருந்த மடத்து அன்பர்கள், பிள்ளையாரை வைத்துப் பூசைசெய்வதுபோல் நடித்துக் கொண்டிருந்தார்கள். அந்தணர் யதீந்திரர் முன்சென்று குருவே பிள்ளையாருக்கு முன் வாழைப் பழத்தை வைத்திருக்கிறீரே, அதை உரித்துப் பிள்ளையாருக்கு ஊட்டும். பிள்ளையார் உண்டு உவக்கட்டும்.

குருநாதர் அவரை விழுங்கி விடுவதுபோல் பார்த்து 'ஏனப்பா பிள்ளையார் வாழைப் பழத்தை உண்ணுவாரா?' எனக் கேட்டார். அந்தணர், 'குருவே நீர்தந்த எங்கள் வீட்டுப் பிள்ளையார் முக்கால்படி சோறு தின்கிறார். வறுமையாகிய சிறுமையில் வாடிக்கிடந்த என்னுடைய மாளிகைக்கு வாருங்கள். காணிக்கை தருகிறேன்' என்று கூறிக் குருநாதரைத் தம் இல்லத்துக்கு அழைத்துச் சென்றார். அங்கு விநாயகர் உலாவிக் கொண்டிருப்பதைக் குருநாதர் கண்டு வியந்தார்.

''மகாகணபதி ஐம்பது ஆண்டுகளாக வழிபாடு செய்கிறேன், என் கனவிலும் காட்சி தந்தீரில்லை. இங்கு உலாவுகின்றீரே என்று கேட்டார். கணேசப்பெருமான் ''அன்பனே இந்த அந்தணன் உள்ளம் உருகி, ஆனந்த வெள்ளம் பெருகி, நேற்றுச் செய்த ஒருநாள் பூசைக்கு உன்னுடைய ஐம்பது வருடப் பூசைஇணையாகாது'' என்று கூறியருளினார்.

அந்தணர் குருநாதருக்குத் தங்கக் கட்டிகளை வெள்ளித்தட்டில் வைத்து அளித்தார். விநாயகரை வழிபட்டு வீடுபேறு பெற்றார்.

★

# தமிழிசைக் காவலர்

# திருஞானசம்பந்தர்

திருஞான சம்பந்தருக்கு உபநயனம் முடிந்திருந்த காலத்தில் திருநாவுக்கரசர் சம்பந்தரை முதன்முதலில் காணச் சீர்காழிக்கு வருகை புரிந்தார். சம்பந்தர் அவரை அன்பாக வரவேற்றதோடு சீர்காழி தோணியப்பரை இருவருமாகச் சென்று வணங்கினர். சிலநாள் தங்கியிருந்த நாவுக்கரசர் சம்பந்தரிடம் விடை பெற்றுச் சென்றதும் சீர்காழியில் இருந்த சம்பந்தர் செந்தமிழ் விகற்பச் செய்யுள்கள் பல பாடியிருந்ததாகச் சேக்கிழார் கூறுகிறார். ஈண்டு பாடப்பட்ட அவையாவும் ஆதி விகற்பங்கள் சாற்றும் பதிக மூல இலக்கியமாகப் பாடினார் என்பது சேக்கிழார் வாக்கு.



ஆதி விகற்பம் என்றும், மூல இலக்கியமாக என்றும் கூறுவதிலிருந்தே சம்பந்தருக்கு முன்னிருந்த தமிழிசை சம்பந்தரால் புத்துயிர் பெற்றது எனத் தெரிகிறது. தாய்த் தமிழ் வழக்கை அயல் வழக்கு சாய்த்து விட்டதால் அதை மீண்டும் உயிர்ப்பிக்கும் முயற்சியாகவே சம்பந்தர் பலவிகற்ப செய்யுள்களைப் பாடி மக்களை ஈர்க்க வேண்டியதாயிற்று. இங்ஙனம் பாடுங்கால், தான் பிறந்த சீர்காழியைப் பலவாறாகப் பாடியதுதான், அவரை நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் மிக்கதமிழிசைக் காவலராக உலகிற்கு அடையாளம் காட்டியது எனலாம். அந்த வகையில் அவர்பாடியசெய்யுள்கள், 1.மொழிமாற்று, 2.மாலைமாற்று, 3.வழிமொழி திருவிராகம், 4.ஏகபாதம், 5.ஈரடி, 6.திருஇருக்குக்குறள், 7.ஏழுகூற்றிருக்கை, 8.ஈரடிமேல் வைப்பு, 9.நாலடிமேல் வைப்பு, 10திருவிராகம், 11.சக்கர மாற்று, 12.திருமுக்கால், 13.திருத்தாளச்சதி, 14.திருயமகம், 15.கோமுத்திரி, 16.வினாவிடை எனப்பதினாறு விகற்பங்களாகும் இப்பதினாறுள் மொழிமாற்று பற்றிய சீர்காழியின் 12 பெயர்களுடன் பாடிய பதிகத்தின் சிறப்பைக் காண்போம்.

ஒரு செய்யுளின் ஒரு தொடரில் வரும் சொல்லை மாற்றிக் கூட்டிப் பொருள் காண்பதற்கு மொழி மாற்று என்று பெயர். இம்மொழிமாற்றில் பாடிய பாடல் வியாழக் குறிஞ்சிப் பண்ணில் சம்பந்தர் தம் பிறந்தகத்தின் பன்னிரண்டு பெயர்களையும் பாடியுள்ளார்.

**காட தணிகலங் காரா வம்பதி காலதனில்**
**தோட தணிகுவர் சுந்தரக் காதினில் தூச்சிலம்பர்**
**வேட தணிவர் விசயற் குருவம் வில்லுங்கொடுப்பற்**
**பீட தணிமணி மாடப் பிரம புரத்தாரே. (1)**

பிரமபுரத்தில் இருக்கும் இறைவன் எத்தகையவர் என்கிறது இப்பாட்டு. காடு அது பதி, கார் அரவம் அணிகலம், கால் அதனில் தூச்சிலம்பர், சுந்தரக் காதினில் தோடு அது அணிகுவர். உருவம் வேடது அணிவர். விசயற்கு வில்லுங்கொடுப்பர். இத்தகையவர்தான் பெருமை மிக்க அழகிய மாடங்களுடைய பிரமபுரத்தில் இருக்கும் ஈசனாவார் என்று பாடலுக்குப் பதங்களை மாற்றிக் கூட்டிப் பொருள்காணவேண்டும்.

**கற்றைச் சடையது கங்கண முன்கையில் திங்கள் கங்கை**
**பற்றித்து முப்புரம் பார்படைத் தோன்றலை சுட்டதுபண்டு**
**எற்றித்துப் பாம்பை யணிந்தது கூற்றை எழில் விளங்கும்**
**வெற்றிச் சிலைமதில் வேணு புரத்தெங்கள் வேதியரே. (2)**

வேணுபுரத்தில் உள்ள வேதியராகிய இறைவர் சடையில் சந்திரனையும் கங்கையையும் பெற்றுள்ளார். கையில் காப்பணிந்துள்ளார். அவர் முப்புரத்தைச் சுட்டவர். உலகைப் படைப் போனாகிய பிரம்மாவின் ஒரு தலையைப் பறித்தவர். எமனைக்காலால் எத்தித் தள்ளியவர்

பாம்பை அணிந்தவர்.

**''கூவிளங் கையது பேரி சடைமுடிக் கூட்டத்து**

**தூவிளங் கும்பொடிப் பூண்டது பூசிற்றுத் துத்திநாகம்**

**ஏவிளங் குந்நுத லாளையும் பாகமும் உரி த்தனரின்**

**பூவிளங் குசோலைப் புகலியுள் மேவிய புண்ணியரே. (3)**

புகலியில் உள்ள புண்ணியராகிய இறைவர் கூவிளத்தைச் (வில்வம்) சடையிலே வைத்துள்ளார், உடுக்கையைக் கையில் கொண்டுள்ளார், தூய்மை விளங்கும் வெண்ணீற்றுப் பொடியைப் பூசியுள்ளார். படத்தையுடைய பாம்பைப் பூண்டுள்ளார். விளங்கும் அழகிய நெற்றியையுடைய உமாதேவியைத் தம் இடப்பாகத்தே உரிமையாய்ப் பெற்றுள்ளார்.

**உரித்தது பாம்பை பாடல் மிசைஇட்டதோர் ஒண்களிற்றை**
**எரித்ததொ ராமையை இன்புறப் பூண்டது முப்புரத்தைச்**
**செருத்தது சூலத்தை ஏந்திற்றுத் தக்கனை வேள்விப் பன்னூல்**
**விரித்தவர் வாழ்தரு வெங்குரு வில்வீற் றிருந்தவரே. (4)**

யாக விதி முறைகளை நூலாக விரித்துத் தந்து வெங்குரு என்னும் சீர்காழியில் வீற்றிருக்கும் இறைவர், தாருகாவன முனிவர்களால் ஏவி விடப்பட்ட யானையை உரித்தவர். தம் உடலில் பாம்பை அணிந்தவர். முப்புரத்தை எரித்தவர். மார்பிலே ஆமை ஓட்டைப் பூண்டவர். தக்கனைச்சினந்தவர். சூலத்தை ஏந்தியவரும் ஆவார்.

**கொட்டுவர் அக்கரை ஆர்ப்பதுதக்கை குறுந்தாளன**
**விட்டுவர் பூதங் கலப்பிலர் இன்புக ழென்புலவின்**
**மட்டுவ ருந்தழல் சூடுவர் மத்தமும் ஏந்துவர்வான்**
**தொட்டுவ ருங்கொடித் தோணி புரத்துறை சுந்தரரே. (5)**

வானத்தைத் தொடும்படியாகக் கொடிகள் பறக்கும் தோணிபுரத்தில் உள்ள இறைவர் தக்கை என்ற இசைக் கருவியைக் கொட்டுபவராவார். இடுப்பில் கட்டியிருப்பது எலும்புமாலை. இனிய புகழை இட்டுக் கொண்டவர். சுடுகாட்டு எலும்பில் உழலும் குட்டையான கால்களையுடைய பூதங்களோடு கலக்காதவர். இனிய தேன்உள்ள ஊமத்தம் பூவைச் சூடிக் கொள்பவர். நெருப்பைக் கையில் ஏந்தியிருப்பவராவார்.

**சாத்துவர் பாசந் தடக்கையி லேந்துவர் கோவணந்தங்**

**கூத்தவர் கச்சுக் குலவிநின் றாடுவர் கொக்கிறகும்**

**பேர்த்தவர் பல்படை பேயவை சூடுவர் பேரெழிலார்**

**பூத்தவர் கைதொழு பூந்தராய் மேவிய புண்ணியரே (6)**

பேரெழில் மிக்கவறெல்லாம் கைதொழுது வணங்கும் பூந்தராய் என்னும் சீர்காழியில் உள்ள இறைவர் கோவணம் அணிந்தவர். கையில் பாசக்கயிறும் பல்வேறு ஆயுதங்களையும் ஏந்தியுள்ளவர். அவர் தலையில் கொக்கிறகும் சூடியுள்ளார். கச்சைஅணிந்து கொண்டு கூத்தாடுபவர். பேய்க்கூட்டங்களைஅழித்தவர்ஆவார்.

**காலது கங்கை கற்றைச் சடையுள்ளாற் கழல்சிலம்பு**
**மாலது ஏந்தல் மழுவது பாகம் வளர்கொழுங்கோட்டு**
**ஆவது வூர்வர் அடலேற் றிருப்பவர் அணிமணிநீர்ச்**
**சேலது கண்ணியொர் பங்கர் சிரபுரம் மேயவரே! (7)**

மீன்போன்ற கண்களை யுடைய உமாதேவியைப் பாகத்திலே பெற்ற சிரபுரமாகிய சீர்காழியிலே உள்ள இறைவர் கழலையும் சிலம்பையும் காலில் அணிந்துள்ளார். தொகுதியான சடையில் கங்கையைக் கொண்டுள்ளார். ஒரு பாகத்தில் திருமாலைக் கொண்டுள்ளார். மழுவைக் கையில் ஏந்தியுள்ளார். வளரும் கொம்புடைய காளை வாகனத்தில் ஊர்ந்து செல்லக் கூடியவர். ஆலகால விடமுண்டு வாழ்பவரும்ஆவார்.

**நெருப்பு வெள்விடை மேனியர் ஏறுவர் நெற்றியின்கண்**
**மருப்புறு வன்கண்ணர் தாதையைக் காட்டுவர் மாமுருகன்**
**விருப்புறு பாம்புக்கு மெய்த்தந்தை யார்விறல் மாதவர் வாழ்**
**பொருப்புறு மாளிகைத் தென்புற வத்தணி புண்ணியரே! (8)**

வெற்றியுடைய முனிவர்கள் வாழும் மலைபோன்ற மாளிகைகள் மிகுந்த புறவம் எனப்படும் சீர்காழியில் உள்ள இறைவர் நெருப்பு போன்ற செம்மேனியர், வெள்விடை ஏறிவருபவர், நெற்றியின் கண்

மாமுருகன் காட்டுவர். அதாவது நெற்றிக்கண். மூலம் முருகனைத் தோற்றுவித்தவர். வலிமை மிக்க கொம்புடைய கூரிய கண்களையுடைய விநாகயருக்குத் தந்தை. பாம்பு விருப்பமாக உடல் முழுதும் விளையாட இடந்தரும் தலைவராகவும் உள்ளவர் ஆவார்.

**இலங்கைத் தலைவனை யேந்திற் றிறுத்த திரலையின்னாள்**
**கலங்கிய கூற்றுயிர் பெற்றது மாணி குமைபெற்றது**
**கலங்கினர் மொந்தையி னாடுவர் கொட்டுவர்காட்ட கத்துக்**
**சலங்கினர் வாழ்வயல் சண்பையுள் மேவிய தத்துவரே! (9)**

நீர் நிலைகள் சூழ்ந்த சண்பை என்னும் சீர்காழியின் உள்ள இறைவர், தம் கால்பெருவிரலால் அழுத்தியது இலங்கைத் தலைவனாகிய இராவணனை ஆகும். கையில் ஏந்தியது மானையாகும். எமன் கொல்லவந்த நாளில் மாணியாகிய மார்க்கண்டேயன் ஈசன் வெளிப்பட்ட அளவில் உயிர் பெற்றான். எமனோ உதைபெற்றான். ஈசன் மொந்தை என்னும் வாத்தியக் கருவியைக் கொட்டும் இயல்புடையவர். சுடுகாட்டிலே ஆடும் இயல்பும் உடையவர் ஆவார்.

**அடியிணை கண்டிலன் தாமரை யோன்மால் முடிகண்டிலன்**
**கொடியணி யும்புலி யேறுகந்தேறுவர் தோலுடுப்பர்**
**பிடியணி யும்நடையான் வெற் பிருப்பதோர்கூறுடையர்**
**கடியணி யும்பொழிற் காழியுள் மேய கறைக்கண்டரே! (10)**

மணம்மிக்க பூம்பொழில் சூழ்ந்த சீர்காழியில் உள்ள இறைவனின் திருவடியைத் திருமால் காணவில்லை. தாமரையில் உள்ள பிரமன் முடியைக் காணவில்லை. காளையை வாகனமாகக் கொண்டவர், புலித்தோல் உடுப்பவர். காளையே அவர்தம் கொடியாகும். இமயமலையில் பெண்யானை போல நடையுடைய உமையவளை ஒரு பாகத்தில் உடையவரும் ஆவார்.


**கையது வெண்குழை காதது சூலம் அமணர்புத்தர்**
**எய்துவர் தம்மை யடியவர் எய்தாரொர் ஏனக்கொம்பு**
**மெய்திகழ் கோவணம் பூண்ப துடுப்பது மேதகைய**
**கொய்தலர் பூம்பொழில் கொச்சையுள் மேவிய கொற்றவரே! (11)**

மேண்மை பொருந்திய மலர்கள் பூக்கும் பொழில் சூழ்ந்த கொச்சைஎனும் பெயருடைய சீர்காழியில் உள்ள இறைவரின் கையிலுள்ளது சூலப்படை. காதில் உள்ளது குழை. மெய்மையுடைய அடியவர்களுக்கு அருள் கொடுக்கக் கூடியவர். அமணர்களும் பௌத்தர்களும் ஈசனை எய்தமாட்டார்கள். பன்றிக் கொம்பை மார்பிலே பூண்டிருப்பார். கோவணத்தை அணிந்திருந்துப்பவராவர்.

**கல்லுயற் கழுமல இஞ்சியுள் மேவிய கடவுள்தன்னை**
**நல்லுரை ஞானசம் பந்தன் ஞானத் தமிழ் நன்குணரச்**
**சொல்லிடல் கேட்டல் வல்லோர் தொல்லை வானவர்தங்களொடும்**
**செல்குவர் சீர் அருளாற் பெறலாம்சிவ லோகமதே! (12)**

மலைபோன்று திட்பமாக உள்ள மதில் சூழ்ந்த கழுமலம் என்னும் சீர்காழியுள் உள்ள இறைவரை நல்ல ஞானத் தமிழால் பாடிய ஞானசம்பந்தரின் பாடலை நன்குணர்ந்து சொல்லவும் கேட்கவும் வல்லவர்கள் வானவருடன் சிவலோக அருளைப் பெறுவர்.

இப்படியாக மொழிமாற்று வகையில் சீர்காழியின் பன்னிரண்டு பெயர்களையும் பாடிச்சிறப்பித்த திருஞான சம்பந்தர் வேறு தலத்தினை மொழிமாற்றில் பாடாதது குறிப்பிடத்தகுந்த ஒன்றாகும். இம்மொழிமாற்றைப் போல் அமைந்த மாலைமாற்று என்னும் பதிகம் ஒரே பதிகமாகப் பாடப்பட்டாலும் அது சீர்காழி என்ற ஒரு பெயரை மட்டுமே கொண்டாடும் பதிகமாக உள்ளது. அது பற்றி அடுத்து சிந்திப்போமாக.



தமிழாகரர் தெ. முருகசாமி, புதுச்சேரி


"வேண்டிய வரம் அருளும் வெங்கட்ரமண ஸ்வாமி"

# மோகனூர் ஸ்ரீபிரசன்ன வெங்கட்ரமண ஸ்வாமி திருக்கோவில்

- பரமத்திவேலூர் கே.எஸ். இளங்கோவன்

தமிழ்நாட்டில் நாமக்கல் மாவட்டத்தில் மோகனூர் என்னும் திருத்தலத்தில் அருள் பெரும் கருணையோடு தன்னை நாடி வருவோருக்கு வேண்டும் வரங்கள் யாவையும் வேண்டியபடி அருளும் பொருட்டு ஸ்ரீ கல்யாண பிரசன்ன வெங்கட்ரமண பெருமாள், கோவில் கொண்டு எழுந்தருளியுள்ளார்.

புராண காலத்தில் ஈஸ்வரனுக்காக இத்திருத்தலத்தில் ஸ்ரீமந் நாராயணன் மோகன அவதாரத்தில் காட்சியளித்தார். மேலும் இத்தலத்திற்கு வில்வாரண்ய க்ஷேத்திரம் என்று ஒரு காலத்தில் வழங்கப்பட்டு வந்திருக்கிறது. பகவான் ஸ்ரீமந் நாராயணன் அவதார சிறப்பின் காரணத்தால் மோகனபுரி என்றும் திகழ்ந்து வருகிறது. இங்குள்ள சிவபெருமானுக்கு மகா விஷ்ணு மோகன அவதார சேவை சாதித்ததால் குமரீஸ்வரன் என்னும் பெயரும் வழக்கத்தில் உள்ளது. இந்த தலத்தில் புண்ணிய நதிகளில் ஒன்றாகிய காவிரி வடக்கு திசையிலிருந்து தெற்கு நோக்கி பாய்வது சிறப்பான ஒன்றாகும். காவிரியும் பிரம்மனும் நெல்லி வ்ருக்ஷமாக தாத்ரி நாராயண பூஜை செய்து எம்பெருமானின் திருவருள் பெற்றுள்ளனர். இதன் அடிப்படையில் இங்கு ஓடும் காவிரியில் நீராடி, இங்குள்ள ஸ்ரீகல்யாண பிரசன்ன வெங்கட்ரமண பெருமானை தரிசிப்பதால் மனக்கிலேசங்கள் நீங்கி பிரார்த்தனைகள் அனுகூலமாகும். பல நூற்றாண்டுகளுக்கு முன்பு இங்கிருந்து ஒரு பெரியவர் ஒவ்வொரு புரட்டாசி பிரம்மோற்சவத்திற்கும் திருப்பதி திருமலைக்கு சென்று தரிசனம் செய்து ஊர் திரும்பி ஸ்ரவண விரதம் முடித்து வந்தார். ஒருமுறை அவருக்கு வாத நோய் ஏற்பட்டு திருமலைக்கு செல்ல முடியாமல் போயிற்று. இதுகுறித்து மலையப்பனை தரிசிக்க





முடியாமல் போனதை நினைத்து வேதனையடைந்து தனது உயிரை இங்கு ஓடும் காவிரியில் விட்டுவிட துணிந்தார், காவிரியை நோக்கி செல்லுகையில் நாக சர்ப்பம் ஒன்று திரும்ப வீடுவரை துரத்தி வந்தது. அன்றைய இரவு அவரின் கனவில் பகவான் ஸ்ரீவேங்கடமுடையான் தோன்றி கவலை கொள்ளாதே உன்னை துரத்திய பாம்பு கிளம்பிய புற்றை அகற்றிப்பார், அதனுள் நான் உனக்காக சேவை சாதிக்கிறேன் என்று அருளினார். பக்தர் உடனே எல்லோரிடமும் இதைச்சொல்லி அந்த பாம்புப் புற்றை சென்று பார்க்கையில் அந்தப் புற்றுக்குள் இப்போது மூலஸ்தானத்தில் எழுந்தருளியிருக்கும் வெங்கட்ரமண பெருமானின் திருஉருவத்தைக் கண்டனர். எல்லோரும் அகமகிழ்ந்து பிரார்த்தனை செய்தனர். அந்த பக்தரின் வாத நோயும் குணமடைந்தது. அதே இடத்தில் கருவறை அமைக்கப்பட்டு ஸ்ரீதேவி பூதேவியுடன் புற்றில் கிடைத்த எம்பெருமானை பிரதிஷ்டை செய்தனர். கல்யாண கோலத்தில் சேவை சாதிப்பதாலும் பக்தருக்காக புற்றில் பிரசன்னமானதாலும் ஸ்ரீகல்யாண பிரசன்ன வெங்கட்ரமண பெருமாள் என்ற திருநாமம் வழக்கத்தில் உள்ளது. புற்றிலிருந்து வெளிப்பட்ட மூர்த்தி என்பதற்கு அடையாளமாக இங்குள்ள சன்னதியின் கற்பகிரக அர்த்த மண்டப, மகா மண்டப துவாரங்களில் புற்றுமண் உருவாகி வருகிறது. இதைப் பக்தர்கள் மருந்தாக உபயோகிக்கிறார்கள்.

மேலும் இத்திருக்கோவிலில் சாந்நித்யம் நிறைந்த திருவாழியாழ்வார் (சக்கரத்தாழ்வார்) ஷோடஸ புஜங்களுடன் பின்புறம் யோக நரசிம்மருடன் சக்கரத்தை சுழற்றிய வண்ணம் அக்னி பாத ஸ்தான மூர்த்தியாக எழுந்தருளி அந்தந்த கிழமைக்கேற்ப கிரகத்தின் தன்மையுடன் அருள் புரிந்து வருகிறார். மேலும் பாலபிஷேகத்தின்போது சுதர்சன மூர்த்தியின் திருமேனி நீலநிறமாக தெரிவதைக்காண கண்கோடி வேண்டும். இதனால் இக்கோவில் சக்கரத்தாழ்வார் சிறப்பு வழிபாட்டுத்தலமாக உள்ளது. இத்தலத்தில் எழுந்தருளியுள்ள சுதர்சன மூர்த்தியை பக்தர்கள் தங்கள் பிரார்த்தனைக்கேற்ப குறிப்பிட்ட கிழமைகளில் 16 வாரம் தீபம் ஏற்றி 16 வலம் வந்து அர்ச்சனை செய்தால் பிரார்த்தனை கை கூடுவது திண்ணம்.

பிரதோஷ காலத்தில் ஸ்ரீசுதர்சன மூர்த்தியை வழிபடுவதால் சகல சத்ரு உபாதைகளும் நிவர்த்தியாவதோடு மரண பயம் நீங்கும், பிரிந்தவர் இணைவர், வழக்கு விவகாரங்களில் வெற்றி கிடைக்கும்.

**பத்மாவதி தாயார்:**

இத்திருக்கோவிலில் மகாலக்ஷ்மி தனிசன்னதியில் ஸ்ரீபத்மாவதி தாயார் எனும் திருநாமத்தோடு அருள்பாலிக்கிறார். தாயார் நமக்கு வேண்டிய வரங்களை வேண்டியபடி அருளக்கூடிய வரப்பிரசாதி. சுக்ர கிரக தோஷங்கள் நீங்க வெள்ளிக்கிழமைகளில் பூஜை செய்து தாம்பூலம், மஞ்சள், குங்குமம், புஷ்பம், ரவிக்கை துணி, கண்ணாடி, சீப்பு போன்றவைகளை வைத்து சர்க்கரை பொங்கல் நிவேதனம் செய்து சுமங்கலிகளுக்கு தாம்பூலம் கொடுத்து அவர்களிடம் ஆசி பெறும் வழக்கம் இத்தலத்தில் உள்ளது.

**தன்வந்தரி பகவான்:**

இத்தலத்தில் ஸ்ரீதன்வந்திரி பகவான் தனிசன்னதியிலிருந்து சேவை சாதிக்கிறார். ஸ்ரீதன்வந்திரி சன்னதியின் முக மண்டபத்தின் மேற்கூரையில் நவக்கிரக மூர்த்திகள் அந்தந்த கிரகங்களின் விருக்ஷத்தினால் அமைக்கப்பட்டுள்ளது மிகச்சிறப்பானது. ஸ்ரீதன்வந்திரி பெருமானுக்கு திருமஞ்சனம் செய்யும் போது சந்தன அபிஷேகத்திற்கு பின் மூலிகை சூரணங்களால் அபஷேகம் செய்யப்படுவது தனிச் சிறப்பாகும். எப்போதும் இந்த சன்னதியில் பக்தர்களுக்கு



மூலிகை சூரணம் பிரசாதமாக வழங்கப்படுகிறது.

இங்கு கோவில் கொண்டுள்ள தன்வந்திரி பெருமாளுக்கு பிரதி செவ்வாய்க் கிழமை தோறும் நல்லெண்ணெய் தீபம் ஏற்றி துளசியால் அர்ச்சனை செய்து நாட்டுச் சக்கரையில் சுக்குப்பொடி சேர்த்து நிவேதனம் செய்வதால் சகல நோய்களும் நிவர்த்தியாகும். ஸ்ரீதன்வந்தரி பெருமாள் பிரகார சுற்றில் வலம்வருவோர் பாத நோய்கள் நிவர்த்தியாக ''அக்குபிரசர்'' முறையில் சிகிச்சையளிக்கும்படி கற்கள் பதிக்கப் பட்டுள்ளன. பெருமாள் சன்னதியின் வெளிப்புற கோஷ்டங்களில் தெற்கு நோக்கியவாறு சிந்தாமணி கணபதியும், ஸ்ரீபூவராஹ மூர்த்தியும், மேற்கு பகுதியில் ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மரும், வடக்கு பகுதியில் பரிமுக பெருமாளகிய ஸ்ரீலக்ஷ்மி ஹயக்ரிவரும் விந்த்ய வாசினி என்னும் துர்க்கையும் சிறப்பாக சேவை சாதிக்கிறார்கள்.

**ஸ்ரீ லஷ்மி ஹயக்கிரிவர்**

இக்கோவிலில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ லஷ்மி ஹயக்ரிவர் மகா சாந்நித்யம் வாய்ந்தவர். இவருக்கு வருடத்தில் ஒரு முறை பள்ளியில் தேர்வுகள் தொடங்கும் முன் லட்சார்ச்சனை சிறப்பாக நடத்தப்படுகிறது. ஒவ்வொரு வியாழக்கிழமையும் மாலை 6.00 மணியளவில் தேன், பாலபிஷேகம் நடைபெறுகிறது. கல்வியில் பின்தங்கியுள்ள மாணவ மணிகள் இவருக்கு தேன் அபிஷேகம் செய்து, அந்த தேன் பிரசாதத்தை அருந்தி வந்தால் கல்வியில் மேன்மை, நினைவாற்றல் அதிகரித்தல் போன்ற பலன்களை அடைவர்.

**ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மர்**

இங்கு கோஷ்டத்தில் மேற்கு நோக்கி எழுந்தருளியுள்ள ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மருக்கு

பிரதோஷ காலத்தில் அபிஷேக ஆராதனைகள் நடந்து வருகிறது. இவரை பிரதோஷ வேளையில் வழிபடுவதால் கிரக தோஷங்கள் நீங்கி சர்வ காரிய சித்தி அடையலாம்.

**ஸ்ரீலக்ஷ்மி வராஹ சுவாமி**

இங்கு எழுந்தருளியுள்ள ஸ்ரீலக்ஷ்மி வராஹ சுவாமிக்கு புதன் கிழமைகளில் நல்லெண்ணெய் தீபம் ஏற்றி துளசியால் அர்ச்சனை செய்தால் பூமிலாபம், மனை, வீடு வாங்கக்கூடிய ப்ராப்தம் ஏற்படும்.

மற்றும் சேனை முதல்வர் நம்மாழ்வார் மற்றும் சன்னதியின் ஈசானாப் பாகத்தில்





மோகனூர் ஸ்ரீ எழில் ஆழி இறையவன்

காவிரித் தாய் எழுந்தருளியுள்ளது மிகச்சிறப்பானதாகும். சன்னதிக்கு நேர் எதிரே திருக்கோவிலுக்கு வெளியே பெருமானை சேவிக்கும் வகையில் ஸ்ரீஆஞ்சநேயர் சன்னதியும் அமைந்துள்ளது.

**ஸ்ரீசத்ய நாராயண பூஜை**

இச்சன்னதியில் பிரதி மாதம் ஸ்ரவண தீப வழிபாட்டுடன் கூடிய பூஜையில் அநேக பக்தர்களும் கலந்து கொண்டு பிரார்த்தனைகள் யாவும் அனுகூலம் அடைந்து வருகிறார்கள்.

ஒவ்வொரு மாதமும் திருவோண நட்சத்திரத்தன்று காலையில் பெருமாளுக்கு ஸ்நபன திருமஞ்சனமும் (திரை நீக்கி அபிஷேகம்) மாலையில் சத்ய நாராயண பூஜையும் கருட சேவையும் சிறப்பாக நடைபெறுகிறது. சத்ய நாராயண பூஜையில் மட்டைத் தேங்காய் வைத்து பூஜித்து பின் அத்தேங்காயை பூஜையில் வைத்த பக்தருக்கு திரும்பக் கொடுக்கப்படுகிறது. அந்தத் தேங்காயை பக்தர்கள் வீட்டில் பூஜை அறையில் வைத்து ஸ்ரீசத்ய நாராயண சுவாமியை நினைத்து தினமும் வழிபட்டு வந்தால் தங்கள் பிரார்த்தனைகள் மூன்று மாதத்திற்குள் அனுகூலமாகும். பின்னர் அத்தேங்காயை ஸ்ரீசத்ய நாராயண பூஜையில் சமர்ப்பிப்பது வழக்கம். அன்றைய நாளில் வெளியூரிலிருந்து இப்பூஜைக்கு பக்தர்கள் வருவதால், இரவு நாமக்கலுக்கு திரும்புவதற்கு சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகிறது.

இத்திருக்கோவிலில் வருடாந்திர உற்சவமாக புரட்டாசி மாதம் ஒவ்வொரு சனிக்கிழமைகளில் காலை பெருமாளுக்கு சிறப்பு அலங்காரமும், மாலையில் கருட சேவையும் நடைபெறும். புரட்டாசி மாத ஒவ்வொரு சனிக்கிழமையும் ஒவ்வொரு சிறப்பு அலங்காரத்தையும் காண கண்கோடி வேண்டும். நவராத்திரியை அனுசரித்து வருடத்தில் ஒருநாள் ''திருமலையில் ஒருநாள்'' என்னும் வைபவம் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்த விழா அதிகாலை சுப்ரபாதத்தில் தொடங்கி இரவு ஏகாந்த சேவை வரை திருமலையில் நடைபெறும் அனைத்து வைபவங்களும் சிறப்பாக இங்கு நடைபெறும்.

**இத்தலத்தின் சிறப்பு**

மூலவர் மூர்த்தி : அருள்மிகு ஸ்ரீகல்யாண பிரசன்ன வெங்கட்ரமண பெருமாள். உற்சவர்:ஸ்ரீனிவாச பெருமாள் திருமேனியில் திருமகளின் ரேகை சிறப்பு அம்சம்

தாயார் : பத்மாவதி மஹாலக்ஷ்மி

தீர்த்தம் : திருக்காவிரி

தலவிருட்சம் : வில்விருஷம்

திருவாராதனம் : ஸ்ரீவைகானஸ ஆகமம்

விமானம் : வேதஸ்ருங்கவிமானம்




சிறப்பாசிரியர் மற்றும் வெளியிடுவோர் : திருமிகு த. பிச்சாண்டி, இ.ஆ.ப., முதன்மை செயலர் / ஆணையர்
தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறை, சென்னை - 600 034. தொலைபேசி : 28334811/12/13

ஆசிரியர் (கூ.பொ.) : ம. தேவேந்திரன், பி.எஸ்சி., பி.எல்., துணை ஆணையர்

அச்சிடுவோர் : குணசுந்தரி மாடர்ன் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை -21. தொலைபேசி : 25967929






சென்னை, மயிலாப்பூர், அருள்மிகு கற்பகாம்பாள் உடனாய கபாலீசுவரர் திருக்கோயிலில், 17.11.2008 அன்று புதிய நூலகக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவும், கண்காணிப்புக் கருவிகள் இயக்க அறை திறப்பு விழாவும் நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.கேஆர். பெரியகருப்பன் அவர்கள் நூலகத்திற்கான அடிக்கல் நாட்டியும், கண்காணிப்பு கருவிகள் இயக்க அறையினைத் திறந்து வைத்தும் சிறப்பித்தார். தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை அரசுச் செயலர் திரு.க. முத்துசாமி, இ.ஆ.ப., அவர்கள், இந்து சமய அறநிலையத்துறை முதன்மை செயலர் / ஆணையர் திரு. த. பிச்சாண்டி, இ.ஆ.ப., அவர்கள், அறங்காவலர் குழுத் தலைவர் டாக்டர் நல்லி என். குப்புசாமி செட்டியார் அவர்கள், அறங்காவலர்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.





சென்னை, மாங்காடு, அருள்மிகு காமாட்சி அம்மன் திருக்கோயிலில், அன்னதானக் கூடம் முதல் தளம் திறப்பு விழாவும், அருள்மிகு மாந்தியம்மன் திருக்கோயிலில் திருப்பணி துவக்க விழாவும், பக்தர்கள் இளைப்பாறும் மண்டபம் மற்றும் செயல் அலுவலர் குடியிருப்புக்கான அடிக்கல் நாட்டு விழாவும், அருள்மிகு வெள்ளீஸ்வரர் திருக்கோயிலில் நால்வர் பிரதிஷ்டை விழாவும் 09.11.2008 அன்று நடைபெற்றது. மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள், திருப்பணியினை துவக்கி வைத்து சிறப்பித்தார். இவ்விழாவில் திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.ஆ.கிருஷ்ணசாமி அவர்கள், பள்ளிப்பட்டுத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர். ஈ.எஸ்.ராமன் அவர்கள், தமிழ் வளர்ச்சி அறநிலையம் மற்றும் செய்தித்துறை அரசு செயலர் திரு.க.முத்துசாமி, இ.ஆ.ப., அவர்கள், இந்து சமய அறநிலையத்துறை முதன்மை செயலர்/ ஆணையர் திரு.த.பிச்சாண்டி, இ.ஆ.ப., அவர்கள், வேலூர் மண்டல இணை ஆணையர் திரு.கோ.பக்கிரிசாமி அவர்கள், பரம்பரை தர்மகர்த்தா டாக்டர். மணலி. ஆர்.சீனிவாசன் அவர்கள், துணை ஆணையர் இரா.பத்மநாபன் அவர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பதிவு எண் : TN / PMG / (CCR) / 707 / 06-08 / WPP No. 451/06-08



108 வைணவ திவ்ய தேசங்களில் முதன்மையானதும்
பூலோக வைகுண்டம் என போற்றப்படுவதுமான

# ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில்

## வைகுண்ட ஏகாதசி திருவிழா

108 திவ்ய தேசங்களில் முதன்மையானதும், பூலோக வைகுண்டம், பெரியகோயில் என்று அழைக்கப்படுகிற ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலில் நடைபெறும் அனைத்து உற்சவங்களுமே சிறப்பு வாய்ந்தவை ஆகும்.

ஒவ்வொரு ஆண்டும் மார்கழி மாதத்தில் நடைபெறும் திருஅத்யயன உற்சவம் (வைகுண்ட ஏகாதசி, திருமொழி, திருவாய் மொழித் திருநாட்கள்) முக்கிய திருவிழா ஆகும்.

பகல் பத்து, இராப்பத்து 'இயற்பா' என்று 21 நாட்கள் நடைபெறும். இந்த உற்சவத்தில் பகல் பத்தின் போது நம்பெருமாள் அர்ச்சுன மண்டபத்திலும். இராப்பத்து திருநாளில் திருமாமணி மண்டபத்திலும் (ஆயிரங்கால் மண்டபம்), எல்லா ஆழ்வார்கள், ஆச்சாரியர்களுடன் எழுந்தருளிச் சேவை சாதிப்பது மிகவும் சிறப்பாகும்.

பகல் பத்தின் போது திருமொழிப் பாசுரங்களும், இராப்பத்தில் திருவாய்மொழிப் பாசுரங்களும் அபிநயங்களுடன் அரையர்களால் சேவிக்கப்படும். பகல்பத்து திருநாளில், பத்தாம் நாள் நம்பெருமாள் மோகினி அலங்காரத்துடனும். வைகுண்ட ஏகாதசி அன்று நம்பெருமாள் ரத்ன அங்கியுடனும், மூலவர் முத்தங்கியுடனும் சேவை சாதிப்பார்கள்.

வைகுண்ட ஏகாதசியன்று காலை நம்பெருமாள் பரமபதவாசல் வழியே வந்து திருமாமணி மண்டபத்தில் எழுந்தருளுவார். இராப்பத்து எட்டாம் திருநாளில், நம்பெருமாள் குதிரை வாகனத்தில் எழுந்தருளி வேடுபறி கண்டருளுவார். இராப்பத்துச் சாற்று முறையன்று நடைபெறும் நம்மாழ்வார் மோட்சம் சேவிப்பதற்குக் கண்கொள்ளாக் காட்சியாகும். இந்த உற்சவம் நாலாயிர திவ்யப் பிரபந்தத்திற்கும், ஆழ்வார்களுக்கும் ஏற்றமிகு உற்சவமாகித் திருமங்கையாழ்வார் காலம் தொடங்கி நடைபெற்று வருகின்றது.

இந்த உற்சவத்திற்கு அனைவரும் பெருந்திரளாக வந்திருந்து நம்பெருமாளைச் சேவித்து அருள் பெறும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நடப்பு 1418ம் பசலியில் வைகுண்ட ஏகாதசி திருவிழா 27.12.2008ல் துவங்கி 9.1.2009ல் முடிவடைகிறது:

### முக்கிய திருவிழா நாட்கள்

| | |
|---|---|
| பகல் பத்து திருநாள் தொடக்கம் | 27.12.2008 |
| மோகினி அலங்காரம் | 06.01.2009 |
| வைகுண்ட ஏகாதசி திருநாள் ப்ரமபத வாசல் திறப்பு (சொர்க்க வாசல் திறப்பு காலை 5.00 மணி) | 07.01.2009 |
| திருக்கைத்தல சேவை | 13.01.2009 |
| வேடுபறி - குதிரை வாகனம் | 14.01.2009 |
| நம்மாழ்வார் மோட்சம் | 17.01.2009 |

திருவிழாவிற்கு வருகைதந்து அரங்கநாதசுவாமி திருவருள் பெற அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

சேவார்த்திகள் இணையதளம் மூலம் பணம் செலுத்தி பிரார்த்தனை நிறைவேற்றிட இ-பூஜா வசதி உள்ளது www.srirangam.org

விபரங்களுக்கு

**பெ.கி. தியாகராஜன்,**
பி.எஸ்சி., பி.இ., எஸ்எஸ்ஜ., எப்ஐஇ., எப்.எஸ்.டி.ஏ., எப்.ஐ.வி.,
தலைவர், அறங்காவலர் குழு

**மா. கவிதா,** பி.எல்.,
இணை ஆணையர் / செயல் அலுவலர்

வி. அமுதா
ஆர். ஸ்ரீனிவாசன், பி.எஸ்சி.,
டி. சேகர்
— அறங்காவலர்கள்

பராசர ஆர். திருவேங்கட பட்டர் — சுழல்முறை அறங்காவலர்